# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 128 / 2008 / எம்சி. 8 நாள் : 14.1.2008

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜனவரி 2008-ல் நடைபெறுவது – தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற **21.1.2008** -ஆம் தேதி திங்கள் கிழமை காலை **10.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டக்குறிப்பு

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

/ உண்மைநகல் உத்திரவின்படி/

14/01/08
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## ஜனவரி -08 ம் தேதிய மாமன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண். | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | பொறியியல் பிரிவு-பிரதான அலுவலகம் - Jnnurm திட்ட அலுவலகம் கட்டுதல் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்துதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 2 | மேற்கு மண்டலம்-வார்டு எண் 34 - சுவாமி நாராயண சங்கரதாம் கோயிலுக்கு வரி விலக்கு அளித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 3 | கிழக்கு மண்டலம் - பாப்பநாய்க்கன்பாளையம் மாநகராட்சி வணிக வளாக கடை எண் 1 மற்றும் 2 -உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 4 | மேற்கு மண்டலம்-வார்டு எண் 34-- இராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை நிலையம்-சொத்துவரி விலக்களித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 5 | தெற்கு மண்டலம்- வணிக வளாக கடைகள்-ஒப்பந்தப்புள்ளி கோரியது-ஏலக்கோரிக்கைகள் ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 6 | Jnnurm-நகர்புற ஏழ்மை மக்களுக்கான குடியிருப்புகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் திட்டம்-குடியிருப்புகள் கட்டுதல்-46.50 ஏக்கர் நிலம் விவசாய பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றுதல்-அரசின் உத்திரவிற்கு பிரேரணை அனுப்புதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 7 | நகரமைப்புப் பிரிவு-கிழக்கு மண்டலம்-உப்பிலிபாளையம் கிராமம்-க.ச.எண்.564 /3 உள்ளிட்டவை-20.80 ஏக்கர் நிலம் - வணிக நில உபயோகமாக மாற்றம் கோரியது-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 8 | நகரமைப்புப் பிரிவு-தமிழ் இலக்கிய அமைப்பு-திருச்சி சாலை சுங்கம் சந்திப்பு-திருவள்ளுவர் சிலை நிறுவுதல்-ஆட்சேபனையின்மை சான்று கோரியது-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 9 | பணியமைப்பு-நில அளவைத்துறை-நில அளவையாளர்கள்-அயற்பணிக்காலம்-ஓராண்டு நீட்டிப்பது-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டலம்-வார்டு எண் 68-மகப்பேறு மையம் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளுதல்-ரூ.15.50 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 11 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-வார்டு எண் 54-ஆடு அறுவைமனை கட்டுதல்-தி/.ள். என்.பி.கே. அசோசியேட்ஸ், கோவை –மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமான விலைப்புள்ளி ஏற்றல்- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 12 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-7 அபிவிருத்திப்பணிகள்-மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகள்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 13 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்- 4 அபிவிருத்திப்பணிகள்-மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகள்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 14 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-வார்டு எண் 41-மீன் மார்க்கெட் கடைகள்-குளிர்சாதன வசதி செய்தல்--ரூ.25 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 15 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-வார்டு எண் 41-மீன்மார்க்கெட்டில் குளிர்சாதன வசதி கிடங்கு அமைத்தல் பணி --ரூ.22.7 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 16 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-வார்டு எண் 40-உக்கடம் நகர பேருந்து நிலையம்-நவீனப்படுத்துதல் மற்றும் மராமத்து பணிகள் செய்தல் பணி- ரூ.25 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |

| | |
|---|---|
| 17 | பொறியியல் பிரிவு-மேற்கு மண்டலம்-7 அபிவிருத்திப்பணிகள்-மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகள்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 18 | பொறியியல் பிரிவு-மேற்கு மண்டலம்-வார்டு எண் 64-மேட்டுப்பாளையம் சாலை பேருந்து நிலையம் கட்டுதல் பணி-தி/.ள். ஸ்ரீ புவனா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (இ) பிரைவேட் லிமிடெட்-மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமான விலைப்புள்ளி ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 19 | பொறியியல் பிரிவு-12 அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளுதல்-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 20 | பொறியியல் பிரிவு-8 அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளுதல்-மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமான விலைப்புள்ளி ஏற்றல்--மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 21 | நகரமைப்புப் பிரிவு- தெற்கு மண்டலம்-வார்டு எண் 13-நகரளவு எண் 19 /3-நில உபயோக மாற்றம் கோருதல்-நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்புதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு-மேற்கு மண்டலம்-மேட்டுப்பாளையம் சாலை உரக்கிடங்கு எரிவாயு மயானம் அமைத்தல் பணி- மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமான விலைப்புள்ளி ஏற்றல்- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 23 | Jnnurm-திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்-2180 எண்ணிக்கைகள் தள்ளுவண்டிகள் வாங்குதல் - தி/.ள் பிரபுதயால் ஓம்பிரகாஷ், புதுடெல்லி -ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 24 | Jnnurm-சீர்திருத்தங்கள் மேற்கொள்ளுதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 25 | Jnnurm-ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம்-குப்பைக்கூடைகள் வாங்குதல்-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 26 | Jnnurm-ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம்-டிப்பர் லாரிகள் வாங்குதல்-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 27 | Jnnurm-திட்டப்பணிகள் பார்வையிடல்-வாகனங்கள் வாங்குதல்-மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 28 | மேற்கு மண்டலம்-குத்தகை இனங்கள்-2008-09-பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 29 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-தெற்கு மண்டல அலுவலக கட்டிடம்- 'சி' பிளாக் முதல் தளம்- மதிப்பீடு ரூ.25 இலட்சம்-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 30 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-வார்டு எண் 54-உக்கடம் பகுதி-துப்புரவு பணியாளர் குடியிருப்பு கட்டுதல்-உத்தேச மதிப்பீடு ரூ 5 கோடி-அரசுக்கு பிரேரணை அனுப்புதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 31 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-தெற்கு மண்டல அலுவலக கட்டிடம் 'ஏ' பிளாக் முதல் தளம்- மதிப்பீடு ரூ.25 இலட்சம்-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 32 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-தெற்கு மண்டல அலுவலக கட்டிடம்- 'பி' பிளாக் முதல் தளம்- மதிப்பீடு ரூ.25 இலட்சம்-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 33 | தெற்கு மண்டலம்-குத்தகை இனங்கள்-2008-09-பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 34 | வடக்கு மண்டலம்-குத்தகை இனங்கள்-2008-09-பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 35 | பொறியியல் பிரிவு-கிழக்கு மண்டலம்-வார்டு எண் 7-துப்புரவு பணியாளர் குடியிருப்பு 'சி' மற்றும் 'டி' கட்டுதல்-மதிப்பீடு ரூ 1 கோடி-நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக அனுமதி பெறுதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 36 | பொறியியல் பிரிவு-கிழக்கு மண்டலம்-வார்டு எண் 7-துப்புரவு பணியாளர் குடியிருப்பு 'ஏ' மற்றும் 'பி' கட்டுதல்-மதிப்பீடு ரூ 1 கோடி-நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக அனுமதி பெறுதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |

| | |
|---|---|
| 37 | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டலம்-வார்டு எண் 2-துப்புரவு பணியாளர் குடியிருப்பு 'ஏ' மற்றும் 'பி' கட்டுதல்-மதிப்பீடு ரூ 1 கோடி-நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக அனுமதி பெறுதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 38 | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டலம்-வார்டு எண் 2-துப்புரவு பணியாளர் குடியிருப்பு 'இ' மற்றும் 'எப்' கட்டுதல்-மதிப்பீடு ரூ 1 கோடி-நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக அனுமதி பெறுதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 39 | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டலம்-வார்டு எண் 2-துப்புரவு பணியாளர் குடியிருப்பு 'சி' மற்றும் 'டி' கட்டுதல்-மதிப்பீடு ரூ 1 கோடி-நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக அனுமதி பெறுதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 40 | பொறியியல் பிரிவு-கிழக்கு மண்டலம்-வார்டு எண் 7-நவீன ஆடு அறுவைமனை கட்டுதல் பணி-மதிப்பீடு ரூ. 25 இலட்சம்-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 41 | மேற்கு மண்டலம்-சாஸ்திரி மைதானம்-மின்ஒளி கிரிக்கெட் போட்டி நடத்த அனுமதிக்கப்பட்டது-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 42 | கணிணிப் பிரிவு-கணிணி விபரப் பதிவாளர் முதலிய பணியிடங்கள்-ஒப்பந்த அடிப்படையில் நியமித்தல்-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 43 | பணியமைப்பு-மாமன்ற உறுப்பினர்கள்-பிற உள்ளாட்சி அமைப்புகளின் திட்டங்களை நேரில் கண்டறிதல்-நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி-மாமன்றத்தின் பார்வைக்கு |
| 44 | நகரமைப்புப் பிரிவு-கிழக்கு மண்டலம்-கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்-கட்டாய நில ஆர்ஜிதம் செய்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 45 | கிழக்கு மண்டலம்-நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகம்-கடை எண் 1 மற்றும் 2-உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 46 | கிழக்கு மண்டலம்-குத்தகை இனங்கள்-2008-09-பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 47 | நகரமைப்புப் பிரிவு-வடக்கு மண்டலம்-கணபதி கிராமம்-க.ச.எண் 393/1 முதலியன-பி2-பி3 சாலை-அகலம் குறைத்து அபிவிருத்தி செய்தல்-மாமன்றம் முடிவு செய்தல்-தொடர்பாக |
| 48 | பணியமைப்பு- 4 உதவி பொறியாளர் பணியிடங்கள் நிரப்புதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 49 | பொறியியல் பிரிவு-நகர்நல மையங்களை நவீனமயமாக்குதல்-தெற்கு மற்றும் மேற்கு மண்டலங்கள்-ஸ்கேன் கருவி வாங்குதல்-ரூ.22 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 50 | பொறியியல் பிரிவு-நகர்நல மையங்களை நவீனமயமாக்குதல்-வடக்கு மற்றும் கிழக்கு மண்டலங்கள்-ஸ்கேன் கருவி வாங்குதல்-ரூ.22 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 51 | பொறியியல் பிரிவு-கொசு ஒழிப்புத் திட்டம்- தெற்கு மற்றும் மேற்கு மண்டலங்கள்-வாகனங்களில் பொருத்தப்பட்ட புகை அடிக்கும் இயந்திரங்கள் வாங்குதல்-ரூ.25 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 52 | பொறியியல் பிரிவு-கொசு ஒழிப்புத் திட்டம்- வடக்கு மற்றும் கிழக்கு மண்டலங்கள்-வாகனங்களில் பொருத்தப்பட்ட புகை அடிக்கும் இயந்திரங்கள் வாங்குதல்-ரூ.25 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 53 | பொது சுகாதாரம்-ஒருமுறையே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களை தடை செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 54 | நகரமைப்புப் பிரிவு-வடக்கு மண்டலம்-நகரளவு எண் 169/ 3 பி – நிலபரிவர்த்தனை செய்தல்-மாமன்றம் முடிவு செய்தல்-தொடர்பாக |
| 55 | குடிநீர் விநியோகம் -குடிநீர் கட்டணம் திருத்தியமைத்தல்-குடிநீர் விநியோக விதிகள் திருத்தம் செய்தல்-பொதுமக்கள் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 56 | பொறியியல் பிரிவு-மாநகராட்சி சாலைகள்-இரயில்வே மேம்பாலம்/ அடிமட்ட பாலம் அமைத்தல்-மாநகராட்சி கொள்கை ஒப்புதல் கோரப்பட்டது-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |

நன்றியுரை

## திருக்குறள்

**உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்**

**பாத்தியுள் நீர்சொரிந் தற்று.**

**(குறள் - 718)**

## விளக்கம்

**உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவர்களின் முன்னிலையில் பேசுதல், தானே வளரக்கூடிய பயிர் உள்ள பாத்தியில் நீர் பாய்ச்சுவது போலப் பயன் விளைக்கும்.**

**திருவள்ளுவர்.**

### ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய / குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

மாமன்ற சிறப்புத் தீர்மானம் நாள் 21.1.2008

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியிலுள்ள பொதுப்பணித்துறையின் கீழ் பராமரித்து வரும் 8 நீர் நிலைகளை நன்றாக புனரமைத்து மழைநீர் சேகரிப்பு செய்து பராமரிக்க அனைத்து குளங்களையும் இம்மாநகராட்சிக்கு ஒப்படைக்க மாநகர மன்ற தீர்மானம் எண் 249 நாள் 2.2.2007ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அனைத்து குளங்களையும் நன்றாக பராமரித்து நவீனமயமாக மாற்றுவதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ 127.05 கோடிக்கு தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்றகு பொதுப்பணித்துறையின் தலைமை பொறியாளரின் கருத்துருவினை அரசு துணை செயலாளர் அவர்கள் கேட்டுள்ளார். பொதுப்பணித்துறை தலைமை பொறியாளரும் குளங்களை ஒப்படைக்க எந்தவித சாத்தியக்கூறுகள் இல்லை எனவும், மேற்படி திட்டத்தினை செயல்படுத்த பொதுப்பணித்துறைக்கு வைப்புத்தொகை செலுத்தும் பணியாக செய்யலாம் எனவும் கூறியுள்ளார். இக்கடிதத்தினை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மான எண் 73 நாள் 23.7.2007 ல் பொதுப்பணித்துறை குளங்களை சரிவர பராமரிக்காத காரணத்தை எடுத்து சொல்லி அனைத்து குளங்களையும் மாநகராட்சி வசம் ஒப்படைக்க அரசை வலியுறுத்த மீண்டும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே மாமன்ற தீர்மானங்களின்ன னஅடிப்படையில் 8 குளங்களையும் புனரமைக்க ஆகும் மொத்த தொகையில் மாநகராட்சியின் பங்காக ரூ 38.115 கோடி நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாக பெறுவதற்கு இத்திட்டம் சம்பந்தமான சொத்துக்கள் அனைத்தும் மாநகராட்சியின் சொத்தாகவே இருக்கவேண்டும் என்பதாலும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு மாநகராட்சிக்கு தனியாக அலுவலர்களை நியமிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாலும், பொதுப்பணித்துறையின் திறமை வாய்ந்த சில பொறியாளர்களையும் இணைத்து அயல் பணி மூலமாக பணி மேற்கொண்டு இத்திட்டத்தை நன்றாக நிறைவேற்ற முடியும்.

மேற்கண்ட சூழ்நிலையில் இம்மாநகராட்சியின் 10 இலட்சம் மக்கள் நலனை கருத்தில்கொண்டும் ஒவ்வொரு மழை காலங்களிலும் ஏற்படும் சுற்றுப்புற சீரழிவுகளை கருத்தில்கொண்டும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் உடனடியாக இத்திட்டத்தினை செயல்படுத்த 8 குளங்களையும் மாநகராட்சி வசம் ஒப்படைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்ள தீர்மானம் நிறைவேற்றலாம்.

மாநகர மன்ற தீர்மானம் எண். 209 நாள்: 21.1.08

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 1

கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் தேர்தல் பிரிவு அலுவலக கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்ட அலுவலகம் கட்டுவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 02-12-2007 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15352/07 எம்.டி.4 | வார்டு எண் 40- கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் தேர்தல் பிரிவு அலுவலக கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்ட அலுவலகம் கட்டுதல். | 25.00 | 28-11-07 முதல் அழைப்பு | தி /ள் கே.சி.பி. என்ஜினியர்ஸ் அண்டு பேபிரிகேட்டர்ஸ் | 4.52 % அதிகம் |
| 2 | 15355/07 எம்.டி.4 | வார்டு எண் 40- கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் தேர்தல் பிரிவு அலுவலகத்திற்கு வெர்டிபைடு சிலாப் கற்கள் பதித்தல் மற்றும் சுகாதார வசதி, குடிநீர் வசதி செய்தல். | 25.00 | 28-11-07 முதல் அழைப்பு | தி/ ள் கே.சி.பி. என்ஜினியர்ஸ் அண்டு பேபிரிகேட்டர்ஸ் | 4.56 % அதிகம் |
| 3 | 15354/07 எம்.டி.4 | வார்டு எண் 40- கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் தேர்தல் பிரிவு அலுவலகத்திற்கு குளிர்சாதன வசதி, தளவாடங்கள், மின் வசதி செய்தல், மேல்கூரை அமைத்தல் மற்றும் கூட்ட அறை வசதிகள் செய்தல் | 25.00 | 28-11-07 முதல் அழைப்பு | தி /ள் கே.சி.பி. என்ஜினியர்ஸ் அண்டு பேபிரிகேட்டர்ஸ் | 4.87 % அதிகம் |
| 4 | 15353/07 எம்.டி.4 | வார்டு எண் 40- கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் தேர்தல் பிரிவு அலுவலகத்திற்கு உட்புற வடிவமைப்பு மற்றும் தொலைபேசி வசதிகள் செய்யவும் கணினிகள் இயக்குவதற்கான மேசை நாற்காலிகள் , கேபிள் இணைப்புகள் வழங்குதல் | 25.00 | 28-11-07 முதல் அழைப்பு | தி /ள் கே.சி.பி. என்ஜினியர்ஸ் அண்டு பேபிரிகேட்டர்ஸ் | 4.69 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிகளை குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், அனுமதிக்கலாம்.

ந.க.எண் :15352/ 07/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண். 210 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 2

பொருள்- கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம்- வார்டு எண்.34- சுவாமி நாராயணசங்கரதாம் கோவிலுக்கு வரிவிலக்கு அளிக்க கோரியது- தொடர்பாக.

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.34, கதவு எண். 204-204-1 வரிவிதிப்பு எண்கள் 100602 மற்றும் 104838-க்கு அரையாண்டு வரி முறையே ரூ.238/- ரூ. 11759/- வரி விதிப்பு எண். 104838 -க்கு அபராத தொகை ரூ. 3100/- என உள்ளதை வரிவிலக்க கோரி, போசேஸ்வரி ஸ்ரீ அக்சர்புருஷோத்தம் சாமி நாராயணன் சந்தா என்ற கோவில் டிரஸ்டு விண்ணப்பித்துள்ளனர்.

மேலும் வரி ஆய்வாளர் தமது குறிப்பில் மேற்படி கோவில் பொது வழிபாட்டுக்காக மட்டும் உபயோகிக்கப்படுவதாகவும், வருமானம் வருகின்ற கட்டிடங்கள் ஏதும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் மாமன்ற வழக்கறிஞர் தமது குறிப்பில் மாநகராட்சி சட்டம் 123 (எ)-ன்படி வரி விலக்களிக்கலாம் என குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே வரிவிதிப்பு எண். 100602, 104838-க்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து வரிவிலக்களித்து அனுமதியின்றி கட்டிய கட்டிடத்திற்கு ஏற்கனவே செலுத்திவரும் அபராதத் தொகையை வசூல் செய்யவும் மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண்: 2417/07/ அ3(மே)

மாநகர மன்ற தீர்மானம் எண். 211 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பு நிராகரிக்கவும், சொத்துவரி விலக்களிக்க அனுமதி மறுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 3

பொருள்- வணிக வளாகம் - கோவை மாநகராட்சி - கிழக்கு மண்டலம்- பா.நா.பாளையம் மாநகராட்சி வணிக வளாக கடை எண். 1 மற்றும் 2- உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு - ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு—ஒப்படை செய்ய அனுமதி கோருதல்-தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 19 பகுதியில் மாநகராட்சி வரிவசூல் மையமாக செயல்பட்டு வந்த 10' x 11' அளவுள்ள இரண்டு கட்டிடங்களை மாமன்ற தீர்மான எண். 54 நாள் 28.7.2006-ன்படி வணிக உபயோகத்திற்கான கடைகளாக மாற்றம் செய்யப்பட்டு, ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு நடத்திக்கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் /மறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளிகள் 11 முறை ஏலம் கோரப்பட்டது.

இதில் தொடர்ச்சியாக 10 முறை கோரப்பட்ட ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. 11-வது முறையாக 12.9.2007-ம் தேதியன்று கோரப்பட்ட மறு பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஏலதாரர்கள் கலந்துகொண்டு கடை எண். 1-க்கு அதிகபட்ச மாத வாடகையாக திரு. எஸ்.எஸ். ரவிக்குமார் என்பவர் மாதம் ஒன்றிற்கு ரூ.1,875/-க்கும், கடை எண்.2-க்கு அதிகபட்ச மாத வாடகையாக திரு பி. கார்த்திகேயன் என்பவர் மாதம் ஒன்றிற்கு ரூ.1900/-க்கும் கோரியுள்ளனர்.

மேற்படி கடைகளுக்கு பொதுப்பணித்துறை வாடகைக் கணக்கீட்டின்படி, மாத வாடகையாக ரூ. 1300/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியில் தனியார் கடைகளுக்கு அதிகபட்சமாக சதுரடிக்கு ரூ.10.93 வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்காண் கடைகளுக்கு கோரப்பட்டுள்ள அதிகபட்ச மாதவாடகை தொகைகள் தனியார் கடைகளுக்கு பெறப்படும் வாடகைத் தொகைகளைக் காட்டிலும் அதிகமாகவும், பொதுப்பணித்துறை வாடகை கணக்கீட்டின்படி நிர்ணயம் செய்யப்பட்டால் பெறப்படும் வாடகையினை காட்டிலும் சற்று கூடுதலாக வருவதாலும், மேலும் கடந்த ஓராண்டுக்கும் மேலாக ஏலம் கோரப்பட்டு வருவதனால், வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு, தற்போது கடை எண்.1-க்கு திரு எஸ்.எஸ். ரவிக்குமார் என்பவரால் கோரப்பட்டுள்ள அதிகபட்ச மாத வாடகை ரூ.1,875/- மற்றும் கடை எண்.2-க்கு திரு. பி. கார்த்திகேயன் என்பவரால்

கோரப்பட்டுள்ள அதிகபட்ச மாத வாடகை ரூ. 1900/-ஐ ஏற்றுக்கொண்டு ஒப்படை செய்ய விரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.10 நாள் 14.11.2007-ல் அனுமதி வழங்கி தீா்மானம் நிறைவேற்றியுள்ளது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண் : **7272/2006/** கிஅ.7

**மாநகர மன்ற தீா்மானம் எண். 212 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

**பொருள் எண் : 4**

பொருள்- கோவை மாநகராட்சி –மேற்கு மண்டலம்-வாா்டு எண்.34-இராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை நிலையம்-சொத்துவரி விலக்களிக்க கோரியது-தொடா்பாக.

வாா்டு எண்.34, வரிவிதிப்பு எண். 100526, அரையாண்டு வரி ரூ. 4637 என விதிக்கப்பட்டுள்ள சொத்து வரியினை வரி செலுத்திவதிலிருந்து விலக்களிக்குமாறு இராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை கல்வி நிலையத்தின் முதல்வா் தமது 9.11.2006 ம் தேதிய விண்ணப்பத்தில் விண்ணப்பித்துள்ளாா்.

மேலும், இப்பொருள் தொடா்பாக சம்பந்தப்பட்ட வாா்டு வரி ஆய்வாளா் தமது குறிப்பில் மேற்படி வரிவிதிப்பு எண். 100526-ல் உள்ள இராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை கல்வி நிலையம் சலுகை பெற தகுதி உள்ள நிறுவனம் என்று குறிப்பிட்டுள்ளாா். மேலும் மாமன்ற வழக்கறிஞா் தமது குறிப்பில் மாநகராட்சி சட்டம் 123-சி-ன்படி, சொத்துவரி செலுத்துவதிலிருந்து வரிவிலக்கு அளிக்கலாம் என கருத்து தெரிவித்துள்ளாா். மேற்படி வரிவிதிப்பு எண். 100526-க்கு 2005-06(2) ஆம் அரையாண்டு வரை வரி செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், இராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை நிலையம் வரி விதிப்பு எண். 100526-க்கு 1.4.2006 முதல் சொத்துவரி செலுத்துவதிலிருந்து வரி விலக்களிக்க, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண். 11 நாள். 24.10.2007-ல் அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, மேற்படி வரிவிதிப்பு எண். 100526-க்கு 1.4.2006 முதல் சொத்துவரி செலுத்துவதிலிருந்து வரி விலக்களிக்க மாமன்ற ஒப்புதல் வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண் : **10225/2006/** அ3(மே)

**மாநகர மன்ற தீா்மானம் எண். 213 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

**பொருள் எண் : 5**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளுக்கு 06.09.2007-ம் தேதியில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ் குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு மட்டும் ஏல வைப்புத்தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டு உயா்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளனா்.

## I. அவினாசி ரோடு வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | கடையின் அளவு | உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 22 | திரு . துல்பிகர் அலி | 10’ x 12’ | ரூ. 6100/- |
| 23 | திரு. ஜோதிபிரகாஷ் | 10’ x 12’ | ரூ. 7100/- |

மேற்படி கடைகளில் கடைஎண் 22-ஐ பூட்டப்படும் காலத்தில் மாத வாடகை ரூ. 6071 ஆகவும், கடை எண் 23-க்கு பூட்டப்படும் காலத்தில் மாத வாடகை ரூ. 6564 ஆகவும் இருந்தது.

## II. முத்து விநாயகர் கோவில் வீதி வணிக வளாகம் (முதல் தளம்)

| கடை எண் | பெயர் | கடையின் அளவு | உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 10 | திரு . முரளி | 10’ x 10’ | ரூ. 1400/- |
| 11 | திரு. எஸ். ஆதில் அகமது | 10’ x 10’ | ரூ. 2500/- |
| 12 | திரு. ஏ. சத்தார் | 10’ x 10’ | ரூ. 2500/- |

இவ்வணிக வளாகம் கட்டப்பட்ட நாளிலிருந்து முதல்தளம் கடைகள் அனைத்தும் காலியாகவே உள்ளது. இதுவரை நடைபெற்ற ஏலங்களில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

## III. ஒப்பணக்கார வீதி வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | கடையின் அளவு | உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 6 | திரு . செய்யது இப்ராஹிம் | 10’ x 12’ | ரூ. 1200/- |

இக்கடையானது கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் காலியாக உள்ளது. இதுவரை நடைபெற்ற ஏலங்களில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

மேற்படி ஏலக்கோரிக்கைகளை ஏற்பது தொடர்பாக கணக்கு குழுவின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டதில் கணக்குக்குழு தனது தீர்மானம் எண் 10 நாள் 24.10.07 –ல் முத்து விநாயகர் கோவில் வீதி வணிக வளாகம் (முதல் தளம்) மற்றும் ஒப்பணக்கார வீதி வணிக வளாகம் ஆகியவைகள் மன்றத்தின் முடிவிற்கும், அவிநாசி ரோடு வணிக வளாகக் கடைகளுக்கு மறுஏலம் கோரவும் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி கணக்குக்குழு தீர்மானத்தின்மீது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண் : 1712/2007/ அ10

## மாநகர மன்ற தீர்மானம் எண். 214 நாள்: 21.1.08

பொருளில் முத்துவிநாயகர் கோவில் வீதி வணிக வளாகம் (முதல் தளம்) மற்றும் ஒப்பணக்கார வீதி வணிக வளாகம் ஏலக்கோரிக்கைகளை ஏற்று அனுமதிக்கவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 10 நாள் 24.10.07-ஐ ஏற்று அவினாசி ரோடு வணிக வளாக கடைகளுக்கு மறுஏலம் கோர அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 6

கோவை மாநகராட்சி - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நகர்புற ஏழை மக்களுக்கான குடியிருப்புகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நகரில் உள்ள 173 குடிசைபகுதிகளில் 80 குடிசைகள், முதல் மற்றும் இரண்டாம் கட்டங்களில் தேர்வு செய்யப்பட்டு அப்பகுதியில் உள்ள 12630 குடிசை வீடுகளை ஆர்.சி.சி. கூறையுடன் கூடிய வீடுகள் கட்டுவதற்கும் அக்குடியிருப்புகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் செய்திடவும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ரூ. 258.75 கோடிக்கு இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு தகுதியான பயனாளிகள் கண்டறியப்பட்டு, தற்போது புதிய வீடுகள் கட்டும் பணியும் துவங்கப்பட்டுள்ளது. இது தவிர நகரில் மீதமுள்ள 93 குடிசை பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படவுள்ள 2 குடிசைபகுதிகள் நீங்கலாக மீதமுள்ள 91 குடிசைபகுதிகள் யாவும் நீர்நிலைகள் ஆட்சேபகரமான பகுதிகள் மற்றும் சாலைஓர ஆக்கிரமிப்புகளில் உள்ளது. சென்னை உயர்நீதி மன்ற வழிகாட்டுதல்படி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் குடிசையில்லா கோவை நகரம் ஆக்கும் பொருட்டும் மேற்படி ஆட்சேபகரமான பகுதிகள் உள்ள குடிசைகளுக்கு புதிய மாற்று இடம் தேர்வு செய்து , இந்த ஏழை மக்களுக்கும் புதிய ஆர்.சி.சி. வீடுகள் அமைக்க வேண்டியதின் அவசியம் பொருட்டு, உக்கடம் பகுதியில் உள்ள மாநகராட்சி கழிவு நீர் பண்ணை இடத்தில் சுமார் 46.50 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. இந்த நிலத்தில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் சேர்ந்து வடிவமைக்கப்பட்டு 9600 வீடுகள் கட்டுவதற்கும் இந்த குடியிருப்பு மக்களுக்கு தேவையான ஆரம்ப கல்வி கூடங்கள், சுகாதார மையங்கள் , திருமண மண்டபம், அங்காடிகள் மற்றும் பொழுது போக்கு பூங்காக்கள் அமைக்கவும் ரூ. 185.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மாநில அரசால் ஒப்புதல் பெறப்பட்டு 29-10-2007-ல் மத்திய அரசிடம் இருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே இங்கு செயல்பட்டு வரும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை மாற்றி மாநகராட்சி மூலம் புதிதாக அமைக்கப்படவுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு மிகவும் குறைந்த அளவே நிலம் தேவைப்படுவதால் இந்த திட்டத்திற்கான தேவைப்படும் நில அளவிற்கு எவ்வித வசதி குறைவும் ஏற்படாது. மேலும் மாநகராட்சியால் வழங்கப்படும் இந்நிலத்திற்கு அரசாணை (நிலை) எண். 35 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள் 17-02-1997-ல் அறிவித்துள்ள சலுகை அடிப்படையில் மதிப்பீடு செய்து பயனாளிகளிடம் பங்கீடு செய்து வசூலித்துக் கொள்ள இயலும்.

மேற்படி பகுதியில் இத்திட்டத்திற்கு தேவைப்படும் பட்டியலில் கண்ட புல எண்களில் உள்ள 46.50 ஏக்கர் நிலம் தற்போது விவசாய நிலம் பயன்பாட்டில் உள்ளதால் இதனை குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றுவதற்கு அரசின் உத்திரவினை பெறுவதற்கு உரிய பிரேரணைகள் அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்.          ந.க.எண் :13089 /2006 /எம்.டி.3

### மாநகர மன்ற தீர்மானம் எண். 215 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

<u>பட்டியல்</u>

மாவட்டம் - கோயம்புத்தூர்

வட்டம் - கோயம்புத்தூர் தெற்கு

கிராமம் - கோயம்புத்தூர் (ரூரல்)

<u>மாநகராட்சியால் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலம்</u>

| வரிசை எண் | புல எண் |
|---|---|
| 1 | 105 |
| 2 | 106 |
| 3 | 107/ பா |
| 4 | 108/ பா |
| 5 | 113/ பா |

| | |
|---|---|
| 6 | 114/ பா |
| 7 | 115 |
| 8 | 116 |
| 9 | 117 |
| 10 | 118 |
| 11 | 119/ பா |
| 12 | 120/ பா |
| 13 | 124/ பா |
| 14 | 125 |
| 15 | 126 |
| 16 | 127 |
| 17 | 128 |
| 18 | 129/2 |
| 19 | 130/2 |
| 20 | 131/2 |
| 21 | 132/2 |
| 22 | 133 |
| 23 | 134/2 |
| 24 | 135 |
| 25 | 136 |
| 26 | 137 |
| 27 | 138 |
| 28 | 139/1 |
| 29 | 139/2 |
| 30 | 140/1 |
| 31 | 140/2 |
| 32 | 141/1 |
| 33 | 141/2 |
| 34 | 142 |
| 35 | 143 |
| 36 | 144 |
| 37 | 149/ பா |
| 38 | 150 |
| 39 | 151 |
| 40 | 152 |

---

## பொருள் எண் : 7

கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் திரு. கே. எம். ராமஜெயம், த/பெ. ஜி. நாராயணன் என்பவர் உப்பிலிபாளையம் கிராமம் - மாநகராட்சி வார்டு எண். 7-ல் க.ச எண். 564/3, 560/2பி1, 565/1, 566/2, 567/1, 567/2, 568, 569/2, 570/1, 570/2, 494/2 மற்றும் 496 -ல் 20.87 ஏக்கர் நிலப்பரப்பில் குடியிருப்பு மற்றும் தொழிற்சாலை உபயோகத்திலிருந்து வணிக உபயோக பயன்பாட்டிற்கு நில உபயோக மாற்றம் கோரிய 1.11.2006 -ம் தேதிய விண்ணப்பத்தில் அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை, தலைமைச் செயலகம், சென்னைக்கு முகவரியிட்டு உரிய வழி மூலம் அனுமதி கோரியுள்ளார்.

நில உபயோக மாற்றம் கோரும் 20.87 ஏக்கர் நிலப்பரப்பில் 18.11 ஏக்கர் நிலப்பரப்பு தொழிற்சாலை பகுதியாகவும், 2.76 ஏக்கர் நிலப்பரப்பு குடியிருப்பு பகுதியாகவும் தற்போது சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் 11 மற்றும் 12-ன்படி முழுமை திட்டத்தில் அமைகிறது. மேற்படி இடம் ராஜலட்சுமி மில் வளாகம் ஆகும். பிரதான திருச்சி சாலை அணுகு சாலையாக உள்ளது. சாலையின் அகலம் 80 அடியாக உள்ளது. மேற்படி இடம் வணிக வளாக உபயோகத்திற்கு ஏற்றதாக உள்ளது. வட்டாச்சியர் சான்றிதழ், உதவி ஆணையாளர் நில உச்சவரம்பு, நகர்ப்புற வரிவிதிப்புத் துறை, வில்லங்கச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

தொழிற்சாலை பகுதி மற்றும் குடியிருப்புப் பகுதியிலிருந்து வணிக நில உபயோக மாற்றம் கோரும் மனுதாரரின் கருத்துக்களை நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் ஒப்புதல் பெற்று மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு உரிய வழி மூலம் அனுப்பிவைக்கலாம் என்று நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைகுழுவிற்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீா்மான எண். 41 நாள் 7.12.2007 -ல் " பொருளில் குறிப்பிட்ட தொழிற்சாலை பகுதி மற்றும் குடியிருப்புப் பகுதியிலிருந்து வணிக நில உபயோகமாக மாற்றம் செய்யக் கோரும் மனுதாரரின் மனுவை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யத் தீா்மானிக்கப்பட்டது" என தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-ஒப்புதல் செய்யலாம் ந.க.எண்:**2346 / 06/** கி. எச்.**1**

## மாநகர மன்ற தீா்மானம் எண். 216 நாள்: 21.1.08

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 20.87 ஏக்கா் நிலப்பரப்பில், தற்போது செயல்பட்டுவரும் பள்ளி மற்றும் பள்ளி தொடா்பான விளையாட்டு மைதானம் நிலப்பரப்பு நீங்கலாக மீதமுள்ள இடத்தினை வணிக நில உபயோகமாக மாற்றம் செய்ய தீா்மானிக்கப்பட்டது. பொருளில் குறிப்பிட்டுள்ள நிலத்திற்கு காலியிட வரி நிா்ணயம் செய்து வசூலிக்கவும் தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்துாா் மாநகராட்சி

---

## பொருள் எண் : 8

மாவட்ட ஆட்சித் தலைவா், கோயம்புத்துாா் அவா்கள் தமது 4.10.2006 -ம் தேதிய கடிதத்தில் (கடித எண். ந.க. எண் : 41708 / 06 / இ3) கோயம்புத்துாரில் தெய்வப்புலவா் திருவள்ளுவா் சிலை நிறுவுவதற்காக பல்வேறு தமிழ் இலக்கிய அமைப்புகளின் சாா்பில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவா் சிலை அமைப்புக்குழு மாநகராட்சிக்குட்பட்ட 7 இடங்களில் ஏதேனும் ஒரு இடத்தை தோ்வு செய்து திருவள்ளுவா் சிலை அமைக்க கோரியுள்ளதாகவும், இது குறித்து மாநகராட்சியின் விரிவான அறிக்கையினை அனுப்புமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தெய்வப்புலவா் திருவள்ளுவா் சிலை சுங்கம் சந்திப்பு தென்புறமுள்ள முக்கோண வடிவிலான போக்குவரத்து தீவில் மாநகர காவல் துறை மற்றும் தேசிய நெடுஞ்சாலைத்துறை அல்லது மாநில நெடுஞ்சாலைத்துறை மற்றும் இதர துறைகளிடமிருந்து அனுமதி பெற்ற பின்னா் நிறுவலாம் என்ற நிபந்தனைகளின் பேரில் அனுமதிக்கலாம். மேலும் அரசாணை (நிலை) எண். 221 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை நாள் : 20.11.1998 -ன்படி புதியதாக சிலை நிறுவுவதற்கு கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்றப்பட வேண்டும்.

1. புதியதாக சிலை வைப்பதாக இருந்தால், அது அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்பட வேண்டும்.
2. சிலைகளை வைப்பவா்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். மாநகராட்சியால் பராமரிக்க இயலாது.
3. சிலைகள் வெண்கலத்தால் நிறுவப்பட வேண்டும்.

மேலும், அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி இடத்தில் தெய்வப்புலவா் திருவள்ளுவா் சிலை அமைக்க மாநகராட்சிக்கு ஆட்சேபணையில்லை என்பதை மாவட்ட ஆட்சியா்க்கு தெரிவிக்க மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -பரிந்துரைக்கலாம் ந.க.எண் :**2798 / 2007 / MH5.**

## மாநகர மன்ற தீா்மானம் எண். 217 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பினை ஏற்று பரிந்துரை செய்யலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்துாா் மாநகராட்சி

---

**பொருள் எண் : 9**

பொருள்- பணியமைப்பு-கோவை மாநகராட்சி-நில அளவைத்துறையின் நில அளவையாளர்களின் அயற்பணிக் காலத்தை 1.9.2007 முதல் ஓராண்டு நீட்டிப்பது-தொடர்பாக.

மாநகர மன்ற தீர்மான எண். 117, நாள் 14.09.2006-ல் அனுமதி வழங்கியதின்படி, கோவை மாநகராட்சியின் நில அளவைத் துறையிலிருந்து அயற்பணி அடிப்படையில் 4 சார் ஆய்வாளர்கள் மற்றும் 8 புல உதவியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இப்பணியிடங்களின் அயற்பணிக் காலம் 31.8.2007 உடன் முடிவடைவதால் இப்பணியிடங்களின் பணிக்காலத்தை மேலும் ஓராண்டிக்கு நீட்டிப்பு செய்ய சென்னை நில அளவைப் பதிவேடுகள் துறை, இயக்குநருக்கு பணி நீட்டிப்பு கோரும் முன் மொழிவுகள் அனுப்ப வேண்டியுள்ளது.

மாநகராட்சியிலுள்ள மண்டலம் ஒவ்வொன்றிற்கும் 1 சார் ஆய்வாளர் மற்றும் 2 புல உதவியாளர்கள் வீதம் 4 சார் ஆய்வாளர்கள் மற்றும் 8 புல உதவியாளர்கள் பணியிடங்களை 1.09.2007 முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண்: **11796 / 07/** எம்சி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 218 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் -10**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 68 ல் உள்ள மகப்பேறு மையத்தில் தற்போது உள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் நவீன வசதிகள் கொண்ட அறுவை சிகிச்சை மையம், பிரசவ வார்டு மற்றும் பரிசோதனை கூடம் உள்ள மையமாக அமைப்பதற்கு ரூ. 15.50 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே இம்மதிப்பீடு ரூ. 15.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 16006/2007/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 219 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் - 11**

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு எண் 54க்குட்பட்ட உக்கடம் பகுதியில் ரூ.100.00 இலட்சங்கள் மதிப்பீட்டு தொகையில் Part II திட்டத்தின் கீழ் ஆடு அறுவை மனை கட்ட மாமன்ற தீர்மான எண் 8 நாள் 27-04-2007 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேற்காண் திட்டப்பணிக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவில் ரூ.10.00 இலட்சங்கள் அரசு மானியத்துடனும் மீதமுள்ள ரூ. 90.00 இலட்சங்களை நகர உள்ளாட்சி அமைப்புகள் பங்களிப்புடனும் இத்திட்டத்தினை நிறைவேற்ற நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் செயல்முறை கடிதம் எண் 11183/2007/P3 நாள் 13-06-2007 ன் மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் தனது செயல்முறை கடித எண் 32501/2007/DO3 நாள் 23-06-2007 மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளார்.

மேலும் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கேட்பு அறிக்கை 51/2007 ன் படி 07-08-07 அன்று வரை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் யாது ஒருவரும் பங்கேற்காத காரணத்தால், மறு ஒப்பந்தப்புள்ளி கேட்பு அறிக்கை 71/2007 ன் படி 31-10-07 அன்று வரை ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்காணும் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

1. திருவாளர்கள். என்.பி.கே. அசோசியேட்ஸ் , கோவை

2. திருவாளர்கள். புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட், கோவை.

மேற்குறிப்பிட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் கோரப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் படி திறனாய்வு செய்யப்பட்டதில் நிபந்தனை எண் 4-2(B) ல் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனையை திருவாளர்கள் புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட், கோவை. அவர்கள் பூர்த்தி செய்யவில்லை . மேலும் திருவாளர்கள். என்.பி.கே. அசோசியேட்ஸ் , கோவை அவர்கள் தொழில்நுட்ப தகுதிகள் பெற்றுள்ளதால் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று அதன் அடிப்படையில் மதிப்பீட்டு விலையுடன் ஒப்பீடு செய்ததில், ஒப்பந்ததாரர் திருவாளர்கள். என்.பி.கே. அசோசியேட்ஸ் , அவர்கள் மதிப்பீட்டுத் தொகைக்கு 4.82% அதிகமாக விலைப்புள்ளியினை கொடுத்துள்ளனர்.

மேற்காண் இத்திட்டப்பணி தமிழக அரசு சட்டசபையில் மக்களின் நலத்தினை கருத்தில் கொண்டும், சுற்றுசூழல் மாசுபடுவதை தவிர்க்கும் பொருட்டும், உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்புகளின் தரத்தினை உயர்த்தும் பொருட்டும் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட திட்டப்பணிகளில் ஒன்றாகும். மேலும் இப்பணியின் இன்றியமையாமையினையும் அவசர அவசியத்தையும் கருத்தில் கொண்டு திருவாளர்கள். என்.பி.கே. அசோசியேட்ஸ் , கோவை அவர்களின் மதிப்பீட்டுத் தொகைக்கு 4.82% அதிகமான விலைப்புள்ளியினை ஏற்று இப்பணியினை அந்நிறுவனத்தாருக்கு வழங்க மாமன்ற பொருள் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் : **3644/2007/MD4**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 220 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 12**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 15-11-07 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9546/07/ எம்.டி.4 | வார்டு எண் 25-க்குட்பட்ட ஒசூர் ரோட்டில் தெற்கு மண்டல அலுவலக தரைகீழ் தளம் கட்டுதல் | 25.00 | 16.10.07 முதல் அழைப்பு | தி/ள். விஸ்வநாதன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 3.65 % அதிகம் |
| 2 | 11522/07/ எம்.டி.4 | வார்டு எண் 25-க்குட்பட்ட ஒசூர் ரோட்டில் தெற்கு மண்டல அலுவலக தரைகீழ் தளம் 'பி' பிளாக் கட்டுதல் | 10.00 | 16.10.07 முதல் அழைப்பு | தி/ள். விஸ்வநாதன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 4.75 % அதிகம் |
| 3 | 11523/07/ எம்.டி.4 | வார்டு எண் 25-க்குட்பட்ட ஒசூர் ரோட்டில் தெற்கு மண்டல அலுவலக தரைகீழ் தளம் 'ஏ' பிளாக் கட்டுதல் | 15.00 | 16.10.07 முதல் அழைப்பு | தி/ள். விஸ்வநாதன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 4.75 % அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 5642/07/ எம்.டி.4 | வார்டு எண் 39-க்குட்பட்ட வின்சென்ட் ரோடு ஹவுசிங் யூனிட் பகுதியில் சமுககூடம் கட்டுதல் | 21.50 | 16.10.07 முதல் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.13 % அதிகம் |
| 5 | 6593/07/ எம்.டி.4 | வார்டு எண் 41-க்குட்பட்ட அய்யாசாமி கோயில் வீதியில் கட்டண முறை கழிப்பிடம் கட்டுதல் | 5.60 | 16.10.07 முதல் அழைப்பு | திரு.ஆர்.மயில்வாணன் | 4.10 % அதிகம் |
| 6 | 16926/07/ எம்.டி.4 | வார்டு எண் 46-க்குட்பட்ட எம்.என். ஜி வீதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல் | 4.20 | 19.10.07 முதல் அழைப்பு | திரு.பி. இளங்கோ | 3.48% அதிகம் |
| 7 | 1980/07/ எம்.டி.4 | வார்டு எண் 37-க்குட்பட்ட சிட்டி முனிசிபல் மேல்நிலைப்பள்ளியில் தற்போதுள்ள மங்களூர் டைல்ஸ் மேற் கூரையை மாற்றி சிமெண்ட் கான்கிரீட் கூரை அமைத்தல் | 9.80 | 16.10.07 முதல் அழைப்பு | திரு.என்.குருவாயூரப்பன் | 4.57 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிகளை குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் , அனுமதிக்கலாம்.

ந.க.எண்:9546/07/எம்.டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண். 221 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 13

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 27-11-07 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 696/07/ எம்.டி.4 | வார்டு எண் 42-க்குட்பட்ட ஐயப்பா நகர், கோவிந்தசாமி ரோடு, காட்டேரி தோட்டம் ஆகிய பகுதிகளில் எனர்ஜி சேவிங் தெருவிளக்குகள் அமைத்தல் | 1.90 | 23.11.07 இரண்டாம் அழைப்பு | தி/ள். சன்மேக் எண்டர்பிரைசஸ் | 4.49 % அதிகம் |
| 2 | 14723/07/ எம்.டி.4 | வார்டு எண் 57-க்குட்பட்ட பூசாரிபாளையத்தில் படிப்பகம் கட்டுதல் | 4.10 | 23.11.07 இரண்டாம் அழைப்பு | தி/ள். கே.சி.பி.இன்ஜினியர்ஸ் & பேபரிகேட்டர்ஸ் | 2.81 % அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 10347/07/ எம்.டி.4 | வார்டு எண் 56 க்குட்பட்ட பேரூர் மெயின் ரோடு மற்றும் ராமமூர்த்தி ரோடு சந்திக்கும் இடத்தில் 12.50 மீட்டர் உயரமுள்ள உயர்மட்ட கோபுர விளக்கு அமைத்தல் | 4.00 | 23.11.07 இரண்டாம் அழைப்பு | தி/ள். சன்மேக் எண்டர்பிரைசஸ் | 4.49 % அதிகம் |
| 4 | 11615/07/ எம்.டி.4 | வார்டு எண் 48 க்குட்பட்ட லைட்ஹவுஸ் மைதானத்தில் 12.50 மீட்டர் உயரமுள்ள உயர்மட்ட கோபுர விளக்கு அமைத்தல் | 3.70 | 23.11.07 இரண்டாம் அழைப்பு | தி/ள். சன்மேக் எண்டர்பிரைசஸ் | 4.49 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிகளை குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் , அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 696/07/எம்.டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண். 222 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் -14

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 41க்குட்பட்ட உக்கடம் பைபாஸ் சாலையில் உள்ள மீன் மார்க்கெட்டின் கடைகளுக்கு குளிர்சாதன வசதி செய்தல் பணிக்கு ரூ. 25.00/- இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. 2007-08 ம் நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் : 19383/2007/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண். 223 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் -15

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 41க்குட்பட்ட உக்கடம் பைபாஸ் சாலையில் உள்ள மீன் மார்க்கெட்டில் குளிர்சாதன வசதிக் கிடங்கு அமைத்தல் பணிக்கு ரூ. 22.70/- இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 2007-08 ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் : **19382/2007/எம்.டி.4**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 224 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் -16

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 40க்குட்பட்ட உக்கடம் மாநகராட்சி நகரப்பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தி மராமத்து பணிகள் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நவீன முறையில் மராமத்து பணிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. இப்பணி S.S.F.C அரசு மானியத்தில் செய்யப்படவுள்ளது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் : **19744/2007/எம்.டி.4**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 225 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 17

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 04-01-2008 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16967/07/ எம்.டி.4 | வார்டு எண் 57 பனைமரத்தூர் மயானத்தில் கழிப்பிடம், எரிமேடை மற்றும் சுற்றுசுவர் அமைத்தல் | 20.00 | 14.12.07<br>முதல் அழைப்பு | தி/ள் . எம்.எஸ். இஞ்சினியர்ஸ் | 0.006 % குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 15892/07/ எம்.டி.4 | வார்டு எண் 34 பாரதி பூங்கா வளாகத்தில் அலுவலக குடியிருப்பு கட்டுதல் | 20.30 | 14.12.07 முதல் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் | 0.20 % குறைவு |
| 3 | 15896/07/ எம்.டி.4 | வார்டு எண் 34 மீனாட்சி மகப்பேறு மருத்துவமனைக்கு பிரசவ அறை மற்றும் அறுவை சிகிச்சை கூடம் அமைத்தல் | 25.00 | 14.12.07 முதல் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் | 0.07 % குறைவு |
| 4 | 11409/07/ எம்.டி.4 | வார்டு எண் 64 மேட்டுப்பாளையம் சாலையில் சிறுபாலம் கட்டுதல் | 19.20 | 14.12.07 முதல் அழைப்பு | திரு.ஆர்.செல்வராஜ் | 1.16 % குறைவு |
| 5 | 15576/07/ எம்.டி.4 | வார்டு எண் 62 ராமலிங்கம் நகர் பகுதியில் சுற்றுசுவருடன் சிறுவர் விளையாட்டுத் திடல் அமைத்தல் | 25.00 | 14.12.07 முதல் அழைப்பு | தி/ள் . எம்.எஸ். இஞ்சினியர்ஸ் | 19.55 % குறைவு |
| 6 | 16154/07/ எம்.டி.4 | வார்டு எண் 44 வைசியாள் வீதி, வி.வி.எம்.ஹோமில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 23.30 | 18.12.07 முதல் அழைப்பு | தி/ள்.பி.செந்தில் அன் கோ | 4.88 % அதிகம் |
| 7 | 1191/07/ எம்.டி.4 | வார்டு எண் 37 ஒப்பணக்கார வீதி மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 10.00 | 18.12.07 முதல் அழைப்பு | திருமதி.கே.பங்கஜம் | 4.83 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : வரிசை எண் 1 முதல் 5 வரை உள்ள பணிகளின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 6 முதல் 7 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் , அனுமதிக்கலாம்.

ந.க.எண். : **16967/2007/எம்.டி.4.**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 226 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் -18**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 64க்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் பேருந்துநிலையம் கட்டும் பணிக்கு அரசு ஆணை 24 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 18-02-2005 ன் படி ரூ. 558.53 லட்சங்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு முதல் மூன்று முறைகள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் யாது ஒருவரும் பங்கேற்க வில்லை . எனவே நான்காவது முறையாக நடப்பு ஆண்டு 2007-2008 விலை விவரப் பட்டியல் படி மதிப்பீடு திருத்தப்பட்டு மதிப்பீட்டுத் தொகை ரூ. 7,00,00,000-க்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் இரு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்றுள்ளனர்.

1. திருவாளர். ஸ்ரீ புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட், கோவை

2. திரு. ஏ.மதுரைவீரன், திண்டுக்கல்

பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.மதுரைவீரன், திண்டுக்கல் ஒப்பந்தப்புள்ளியில் வரையறுக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகளில் தேர்ச்சி பெறவில்லை. மேலும் திருவாளர். ஸ்ரீ புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட் அவர்கள் தொழில்நுட்ப தகுதியில் தேர்ச்சி பெற்றுள்ளதால் அவர்களின் விலைப்புள்ளியினை, திறனாய்வுக்கு ஏற்றுகொள்ளப்பட்டு திறனாய்வு செய்ததில் திருவாளர். ஸ்ரீ புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட் அவர்கள் மதிப்பிட்டுத் தொகைக்கு 4.98% அதிகமாக விலைப்புள்ளியினை சமர்ப்பித்துள்ளனர்.

மேலும் இப்பணியினை நடப்பு நிதியாண்டில் செய்து முடிப்பதாக தமிழக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாநகர உட்கட்டமைப்பினை தரம் உயர்த்தும் நோக்கிலும் பொது மக்களின் நலன் கருதியும் இப்பணியினை நடப்பு ஆண்டிலேயே செயல்படுத்தி முடிக்க வேண்டியது அவசர அவசியமாகிறது.

எனவே பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான திருவாளர். ஸ்ரீ புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (I) பிரைவேட் லிமிடெட் அவர்களின் 4.98 % மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இப்பணியினை அவர்களுக்கு வழங்க, மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். : **7526/2007/எம்.டி.3**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 227 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 19**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 04-01-2008 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4355/07/ எம்.டி.2 | வார்டு எண் 65 வெற்றிவேல் நகர், பாங்கோ வீதி மற்றும் ஜெய் நகரில் மறுதார்தளம் அமைத்தல் | 19.50 | 11.12.07 முதல் அழைப்பு | தி/ள். சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.31% குறைவு |
| 2 | 15346/07/ எம்.டி.2 | வார்டு எண் 16 ஹட்கோ காலனி மற்றும் அண்ணாநகரை இணைக்கும் சாலையை மறு சீரமைத்தல் மற்றும் தடுப்பு சுவர் கட்டுதல் | 24.80 | 11.12.07 முதல் அழைப்பு | தி/ள் . எம்.எஸ். இஞ்சினியர்ஸ் | 22.85% குறைவு |
| 3 | 15344/07/ எம்.டி.2 | வார்டு எண் 16 ஹட்கோ காலனி மற்றும் அண்ணாநகரை இணைக்கும் சாலையில் பாலம் கட்டுதல் | 24.60 | 11.12.07 முதல் அழைப்பு | தி/ள் . எம்.எஸ். இஞ்சினியர்ஸ் | 16.14% குறைவு |
| 4 | 4360/07/ எம்.டி.2 | வார்டு எண் 66 வேதாம்பாள் நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 20.00 | 11.12.07 முதல் அழைப்பு | தி/ள் . எம்.எஸ். இஞ்சினியர்ஸ் | 25.82% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 15684/07/ எம்.டி.2 | வார்டு எண் 11 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் மராமத்து பணிகள் செய்தல் | 25.00 | 14.12.07 முதல் அழைப்பு | திரு.கே.ராமசாமி | 0.08% குறைவு |
| 6 | 4356/07/ எம்.டி.2 | வார்டு எண் 66 சங்கனூர் தில்லை நகரில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 25.00 | 14.12.07 முதல் அழைப்பு | திரு.பி.சுந்தர்ராஜ் | 0.62% குறைவு |
| 7 | 4937/07/ எம்.டி.2 | வார்டு எண் 17 வி.ஜி.ராவ் நகரில் மறு தார்தளம் அமைத்தல் | 15.90 | 11.12.07 இரண்டாம் அழைப்பு | தி/ள்.குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.05% குறைவு |
| 8 | 11852/07/ எம்.டி.2 | வார்டு எண் 23 ராமகிருஷ்ணாபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 24.70 | 11.12.07 இரண்டாம் அழைப்பு | தி/ள்.பி.செந்தில் அன் கோ | 4.84% அதிகம் |
| 9 | 2438/07/ எம்.டி.2 | வார்டு எண் 68 ரத்தினபுரி மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 25.00 | 11.12.07 இரண்டாம் அழைப்பு | திரு.ஆர்.செல்வராஜ் | 4.74% அதிகம் |
| 10 | 7550/06/ எம்.டி.2 | வார்டு எண் 66 கணபதி காமராஜபுரம் மாநகராட்சி குடியிருப்பில் மராமத்து பணிகள் செய்தல் | 9.30 | 11.12.07 நான்காம் அழைப்பு | திரு.ஆர்.செல்வராஜ் | 2.69% அதிகம் |
| 11 | 9933/04/ எம்.டி.2 | வார்டு எண் 70 கணேஷ் லே அவுட் ஆரம்பப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 10.00 | 11.12.07 ஆறாம் அழைப்பு | திரு.ஆர்.தங்கவேல் | 4.80% அதிகம் |
| 12 | 10234/05/ எம்.டி.2 | வார்டு எண் 10 ல் மசக்காளிபாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கழிப்பறை கட்டுதல் | 5.00 | 23.11.07 ஆறாம் அழைப்பு | திருமதி.வி.பாக்கியம் | 4.14% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : வரிசை எண் 1 முதல் 7 வரை உள்ள பணிகளின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 8 முதல் 12 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் , அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 4355/07/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 228 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 20**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 19-11-07 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9844/07/ எம்.டி.4 | வார்டு எண் 37 சி.எம்.சி காலனியில் உடற்பயிற்சி கூடம் கட்டுதல் | 4.75 | 14.11.07 முதல் அழைப்பு | திரு. என். குருவாயூரப்பன் | 4.87 % அதிகம் |
| 2 | 9256/06/ எம்.டி.4 | வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் சுற்றுசுவர் கட்டுதல் | 23.00 | 16.11.07 மூன்றாம் அழைப்பு | தி/ள் . எம்.எஸ். இஞ்சினியர்ஸ் | 1.36 % அதிகம் |
| 3 | 12923/05/ எம்.டி.4 | வார்டு எண் 37 சி.எம்.சி காலனியில் சமுதாயக்கூடம் கட்டுதல் | 25.00 | 16.11.07 மூன்றாம் அழைப்பு | திரு. என். குருவாயூரப்பன் | 4.72 % அதிகம் |
| 4 | 9582/05/ எம்.டி.4 | வார்டு எண் 12 சாரமேடு நடுநிலைப் பள்ளியில் வகுப்பறைகள் கட்டுதல் | 12.00 | 16.11.07 மூன்றாம் அழைப்பு | திரு.கே.கோவிந்தராஜ் | 4.74 % அதிகம் |
| 5 | 7180/07/ எம்.டி.4 | வார்டு எண் 28 காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தளம் எண் 3 மற்றும் 4 ல் உள்ள பழுதடைந்த பாதாளசாக்கடை குழாயை மாற்றியமைத்தல் | 3.30 | 14.11.07 மூன்றாம் அழைப்பு | திரு.சி.எஸ். இராமகிருஷ்ணன் | 2.31 % அதிகம் |
| 6 | 7182/07/ எம்.டி.4 | வார்டு எண் 28 காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தளம் எண் 1 மற்றும் 2 ல் உள்ள பழுதடைந்த பாதாளசாக்கடை குழாயை மாற்றியமைத்தல் | 3.30 | 14.11.07 மூன்றாம் அழைப்பு | திரு.சி.எஸ். இராமகிருஷ்ணன் | 2.31 % அதிகம் |
| 7 | 12512/07/ எம்.டி.4 | வார்டு எண் 27 க்குட்பட்ட டாக்டர் நஞ்சப்பா சாலையில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்காக நூலக அறை மற்றும் இணையதள அறை கட்டுதல் | 25.00 | 16.11.07 முதல் அழைப்பு | திரு.என். செந்தில் குமார் | 0.29 % அதிகம் |
| 8. | 1980/07/ எம்.டி.4 | வார்டு எண் 37 சிட்டி முனிசிபல் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் தற்போதுள்ள மங்களூர் ஓட்டுக் கூரையை மாற்றி ஆர்.சி.சி. கூரை அமைத்தல் | 9.80 | 16.10.07 இரண்டாம் அழைப்பு | திரு. என். குருவாயூரப்பன் | 4.57 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிகளை குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகளில் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் , அனுமதிக்கலாம்.

ந.க.எண்: **9844/07/எம்.டி4.**

மாநகர மன்ற தீர்மானம் எண். 229 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 21

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண். 13 நகரளவு வார்டு எண். 10 பிளாக்எண். 42, நகரளவு எண் 19/3 -உள்ள 60 சென்ட் அளவு உள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டம் எண் 13-ன்படி விளையாட்டுத்திடல் (School Play Ground) என்று ஒதுக்கி இருப்பதை நீக்கம் செய்து தருமாறு மனுதாரர்கள் 1. பி. பழனியம்மாள் 2. திரு. தங்கவேல் மற்றும் 3. திரு. என். நாகராஜ் ஆகியோர் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி மூலமாக விண்ணப்பித்துள்ளனர்.

இம்மனையிடத்திற்கு அணுகுபாதையாக இம்மனையின் மேல் புறத்தில் நிலையில் உள்ள மாநகராட்சி சாலை அமைகிறது. மற்றும் இத்திட்டத்தின்படி மனையிடத்தில் திட்ட சாலை ஏதும் உத்தேசிக்கப்படவில்லை. மேலும் இம்மனையிடத்திற்கு வடபுறத்திலும் வாய்க்கால் அமைகிறது. இதுகுறித்து வட்டாட்சியர் (தெற்கு) அவர்கள் கடிதம் ப.மு.எண். 18453/2007/ஆ.10 நாள் 15.11.2007-ல் இம்மனையிடத்தில்

1. அரசு புறம்போக்கு நிலம் ஏதும் சேரவில்லை.

2. நிலம் கையகப்படுத்தும் சட்டம் 1894 பிரிவு 4 (1)-ன் கீழ் இவ்வலுவலகத்தால் அறிவிப்பு செய்யப்படவில்லை மற்றும் நிலம் ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜித பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்கு பெறப்படவில்லை.

3. நில சீர்திருத்தச் சட்டம் 1961-ன்கீழ் கவரப்படுவதில்லை.

4. நகர்புற நில உச்சவரம்பு சட்டம் 1978-ன்படி பாதிப்பில்லை.

5. வெள்ளப்பெருக்கால் உத்தேச மனைப்பிரிவு இடம் பாதிப்படைய வாய்ப்பில்லை.

6. மேற்படி காலைகளுக்கு பொதுப்பணித்துறை வாய்க்காலை கடந்துதான் செல்ல இயலும்.

என்று சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகர் அளவையர் (தெற்கு) அவர்கள் தமது குறிப்பில் மேற்படி இடத்தில் அரசு ஆவணங்களின்படி புறம்போக்கு நிலம் ஏதும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என குறிப்பு சமர்ப்பித்துள்ளார்.

மேலும் இம்மனையிடத்திற்கு கிழப்புறத்தில் அமைந்துள்ள டி.எஸ். எண். 2919/2 -ல் மனையிடம் இத்திட்டத்தின்படி விளையாட்டு மைதானமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நில உபயோகத்தினை நீக்கம் செய்து நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தமது அலுவலக கடிதம் ந.க. எண். 42649/77/DD2 நாள் 13.06.78 அன்று உத்தரவிட்டுள்ளார். இதனை தொடர்ந்து இம்மனையிடத்தில் குடியிருப்பு மனைகளாக பிரிக்கப்பட்டும் மற்றும் குடியிருப்பு மனைப்பிரிவாக அமைக்கப்பட்டு இம்மனைப்பிரிவுக்கு உள்ளூர் திட்டக்குழுமம் L. P/R(CN) No. 246/80 என எண்ணிட்டு திட்ட அனுமதி வழங்கியதின் பேரில் நிலையில் மனைப்பிரிவாக உள்ளது.

மேற்படி நில உபயோக மாற்றம் மற்றும் நீக்கம் குறித்து மனுதாரர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம், வரைபடத்தினை மேல் நடவடிக்கைக்காக உள்ளூர் திட்டக் குழுமத்தின் மூலம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப பொருள் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 39 நாள் 7.12.2007 -ல் " நில உபயோக மாற்றம் செய்யக் கோரும் மனுதாரரின் கோரிக்கையினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது" என தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம். ந.க. எண் : 8753 / 07 /H1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண். 230 நாள்: 21.1.08**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் தீர்மானம் எண். 39 நாள் 7.12.2007-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்திற்கு காலியிட வரி நிர்ணயம் செய்து வசூலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் -22**

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலை உரக்கிடங்கு வளாகத்தில் எரிவாயு மயானம் அமைக்க Part II திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.100.00 இலட்சத்திற்கு கட்ட மாமன்ற தீர்மான எண் 7 நாள்27-04-2007 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேற்காண் திட்டப்பணிக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவில் ரூ.20.00 இலட்சங்கள் அரசு மானியத்துடனும் மீதமுள்ள ரூ. 80.00 இலட்சங்களை மாநகராட்சியின் பங்களிப்புடனும் இத்திட்டத்தினை நிறைவேற்ற நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் செயல்முறை கடிதம் எண் 15575/2007/P1 நாள் 18-06-2007 ன் மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் தனது செயல்முறை கடித எண் 19582/2007/DO3 நாள் 25-06-2007 மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளார்.

மேலும் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கேட்பு அறிக்கை 51/2007 ன் படி 07-08-07 அன்று வரை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் யாது ஒருவரும் தொழில்நுட்ப தகுதி பெறாத காரணத்தால், மறு ஒப்பந்தப்புள்ளி கேட்பு அறிக்கை 71/2007 ன் படி 31-10-07 அன்று வரை ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டதில் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்காணும் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

1. திருவாளர்கள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ் , சென்னை
2. திருவாளர்கள். ஏ.ஆர்.எம். இஞ்சினியரிங் கம்பெனி, சென்னை.
3. திருவாளர்கள். என்வரோடெக் இஞ்சினியரிங் வொர்க்ஸ், மதுரை
4. திருவாளர்கள். ஜுவாலா எக்யூப்மென்ட்ஸ் & கன்சல்டன்ஸ், மதுரை
5.

மேற்குறிப்பிட்டுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் கோரப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் படி திறனாய்வு செய்யப்பட்டதில் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனையை திருவாளர்கள். ஏ.ஆர்.எம். இஞ்சினியரிங் கம்பெனி, சென்னை, திருவாளர்கள். என்வரோடெக் இஞ்சினியரிங் வொர்க்ஸ், மதுரை, திருவாளர்கள். ஜுவாலா எக்யூப்மென்ட்ஸ் & கன்சல்டன்ஸ், மதுரை, அவர்கள் பூர்த்தி செய்யவில்லை. மேலும் திருவாளர்கள்.சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை அவர்கள், தொழில்நுட்ப தகுதிகள் பெற்றுள்ளதால் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று அதன் அடிப்படையில் மதிப்பீட்டு விலையுடன் ஒப்பீடு செய்ததில், ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை அவர்கள், மதிப்பீட்டுத் தொகைக்கு 4.04% அதிகமான விலைப்புள்ளியினை கொடுத்துள்ளனர். இதனை திறனாய்வு குழு பரிந்துரை செய்துள்ளது.

மேற்காண் இத்திட்டப்பணி தமிழக அரசு சட்டசபையில் மக்களின் நலத்தினை கருத்தில் கொண்டும், உள்ளாட்சி அமைப்புகளில் சிறந்த உட்கட்டமைப்புகளை ஏற்படுத்தும் நோக்கில் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட திட்டப்பணிகளில் ஒன்றாகும். மேலும் இப்பணியின் இன்றியமையாமையினையும் அவசர அவசியத்தையும் கருத்தில் கொண்டு திருவாளர்கள். சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை அவர்களின் மதிப்பீட்டுத் தொகைக்கு 4.04% அதிகமான விலைப்புள்ளியினை ஏற்று இப்பணியினை அந்நிறுவனத்தாருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்: **3561/2007/எம்.டி.4**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 231 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 23

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ், கோவை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளில் ஒன்றான, மாநகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகளில் சேரும் குப்பைகளை அகற்றி சுத்தப்படுத்துவதற்கும், மாநகர குடியிருப்புகளில் இருந்து தரம் பிரிக்கப்பட்டு பெறப்படும் திடக்கழிவுகளை அகற்றுவதற்கும் சேகரிப்பதற்கும் மற்றும் மழைநீர் வடிகாலிலிருந்து அகற்றப்படும் மண் அப்புறப்படுத்தும் பணிகளுக்கும் தேவையான தள்ளுவண்டிகள் 2180 எண்ணிக்கைகள் ரூ. 251.75 இலட்ச மதிப்பீட்டில் வாங்குவதற்கு மாமன்றம் தனது தீர்மான எண் 15, நாள். 31-05-2007-ல் ஒப்புதல் வழங்கியதின் பேரில், முதல் ஒப்பந்த அழைப்பாக கடந்த 7-09-07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்காணும் ஐந்து நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1) காதி மற்றும் கிராம தொழில் கூடம், திருப்பூர்
2) மெசர்ஸ். நீல்கமல் லிமிடெட், மும்பை
3) மெசர்ஸ். பிரபுதயால் ஓம்பிரகாஷ், புதுடெல்லி
4) மெசர்ஸ். சின்டெக்ஸ் இன்டஸ்டீரீஸ், சென்னை
5) மெசர்ஸ். கே.எம்.எஸ். கேடர்ஸ், சென்னை

பெறப்பட்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப ரீதியாக தகுதிபெற்ற கீழ்காணும் மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு உறுப்பினர்களின் முன்னிலையில் 21-09-2007 அன்று விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டன. அதன் விபரங்கள் பின்வருமாறு .

| | | | |
|---|---|---|---|
| 1) | மெசர்ஸ். பிரபுதயால் ஓம்பிரகாஷ், புதுடெல்லி | : | ரூ. 2,39,62,560/- |
| 2) | மெசர்ஸ். சின்டெக்ஸ் இன்டஸ்டீரீஸ், சென்னை | : | ரூ. 2,76,94,420/- |
| 3) | மெசர்ஸ். நீல்கமல் லிமிடெட், மும்பை | : | Item No. 3-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு சக்கர குப்பை வண்டியின் தொழில் நுட்ப விபரம் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்ட தொழில்நுட்ப விபரங்களுக்கு பொருந்தாததால் அவர்களது ஒப்பந்தப்புள்ளி ஏற்க இயல வில்லை. |

மெசர்ஸ். பிரபுதயால் ஓம்பிரகாஷ், புதுடெல்லி நிறுவனம், ஒப்பந்தப்புள்ளிகளில் கேட்கப்பட்ட மூன்று இனங்களுக்கு வரிசை எண் 1 மற்றும் 2 வரை உள்ள பணிக்கு முறையே ரூ. 10992/- மற்றும் ரூ. 10992/- ஆகிய ஒப்பந்தப்புள்ளி விலைகளை குறிப்பிட்டு உள்ளனர்.

மெசர்ஸ். சின்டெக்ஸ் இன்டஸ்டீரீஸ், சென்னை நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி வரிசை எண் 3 பணிக்கு மட்டும் ரூ. 8000/- என்று குறிப்பிட்டு உள்ளனர்.

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மொத்த ஒப்பந்தப்புள்ளி தொகையில் குறைவான விலைப்புள்ளி குறிப்பிட்ட மெசர்ஸ். பிரபுதயால் ஓம்பிரகாஷ், புதுடெல்லி நிறுவனத்தினை 15-10-2007-அன்று ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி விலை குறைப்பு வழங்க அழைக்கப்பட்டதன் பேரில் மேற்படி நிறுவனம் கடந்த 15-10-2007-ம் தேதியன்று சமர்ப்பித்த விலைகுறைப்புக்கான சம்மத கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வரிசை எண் 3-ல் குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளி ஒன்றின் விலை ரூ. 10992/-க்கு பதிலாக ரூ. 8000/- க்கு சப்ளை செய்ய ஒப்புதல் வழங்கி உள்ளனர். இவ்விலை குறைப்பினை ஏற்று ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதின் பேரில் மொத்த ஒப்பந்தப்புள்ளியின் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது .

| | | | |
|---|---|---|---|
| 1) | மெசர்ஸ். பிரபுதயால் ஓம்பிரகாஷ், புதுடெல்லி | : | ரூ. 2,33,64,160/- |
| 2) | மெசர்ஸ். சின்டெக்ஸ் இன்டஸ்டீரீஸ், சென்னை | : | ரூ. 2,76,94,420/- |

மொத்த மதிப்பீட்டுத் தொகைக்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெசர்ஸ். பிரபுதயால் ஓம்பிரகாஷ், புதுடெல்லி அவர்களின் மதிப்பீட்டிற்கும் 4.87 சதவிகிதம் குறைவாக வழங்கப்பட்ட ஒப்பந்தபுள்ளியின் மொத்த தொகை ரூ. 2,33,64,160/-ஐ ஏற்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் :11344/2007 / எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண். 232 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பில் தெரிவித்துள்ளவாறு தி.ள் பிரபுதயால் ஓம்பிரகாஷ், புதுடெல்லி நிறுவனத்திடமிருந்து முதல் தவணையாக 100 எண்ணிக்கைகள் தள்ளுவண்டிகள் வாங்கவும், தேவைக்கேற்ப மீதமுள்ள வண்டிகளை வாங்கிக் கொள்ளவும், வடிகாலிலிருந்து அகற்றப்படும் மண் அப்புறப்படுத்தும் பணிக்கு 200 தள்ளுவண்டிகள் வாங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

குப்பை வண்டிகளை வழங்க இறுதிபணி உத்திரவு வழங்குவதற்கு முன்பு மாதிரி தள்ளு வண்டிகளைப் பெற்று, தரத்தை உறுதிசெய்து கொள்ளவேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 24**

மத்திய அரசின் நகர்புற வளர்ச்சி துறையின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.3186.00 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான 50% நிதியை மத்திய அரசும் 20% நிதியை மாநில அரசும் வழங்குகின்றன. இந்த திட்டத்தின் கீழ் வரும் சீர்திருத்த அட்டவணையில் ( Reforms Agenda ) உள்ள நிர்வாக சீர்திருத்தங்களை குறிப்பிட்ட கால அவகாசத்தில் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Agreement) கோயம்புத்தூர் மாநகராட்சி, மாநில அரசு மற்றும் மத்திய அரசு ஆகிய மூன்று அமைப்புகளால் கையொப்பமிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இதுவரை பின்வரும் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. மாநகராட்சி கணக்குகளை இரட்டைப் பதிவியல் முறையில் பேணுதல் ஏற்கனவே 01.04.2000 முதல் நடைமுறையில் உள்ளது.

2. மாநகராட்சி தற்போது செய்து வரும் குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கு (Services) ஏற்படும் பராமரிப்புச் செலவுகளை மட்டுமாவது ஈடுகட்டும் வகையில் கட்டணங்கள் அமைதல் வேண்டும் .

    - குடிநீர் கட்டணங்களை மாற்றியமைக்க மாமன்றம் தனது தீர்மான எண்:78, நாள்.23.07.2007லும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கான சேவை கட்டணத்திற்கு தனது தீர்மான எண்.84, நாள்.24.09.2007-லும் ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் மாநகராட்சி விதிகளின் கீழ் மாற்றியமைக்கப்படும் கட்டணங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. மின் ஆளுமை(E-Governance) முறையில் விரிவான தகவல்கள் பொதுமக்களுக்கு கிடைக்க செய்தல் .

    - ஏற்கனவே கோயம்புத்தூர் மாநகராட்சி வலைத்தளம் ((Web site) மூலம் சொத்து வரி, கட்டிட உரிமம், பிறப்பு-இறப்பு சான்று போன்ற பல்வேறு விபரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் பணம் / காசோலை மூலம் வரி செலுத்தும் இயந்திரங்கள், குரல் மூலம் தகவல் அறியும் வசதி ( I.V.R.S.) , இணையதளம் மூலம் வரி செலுத்தும் வசதி ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

4. நகர்புற ஏழை மக்களுக்கு போதிய அடிப்படை வசதிகள் மற்றும் உறைவிட வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

    - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களாக குடிசைப் பகுதிகளில் வசித்து வரும் ஏழை மக்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய இருப்பிட வசதி மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரும் பணி துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

5. மாநகராட்சியின் மொத்த செலவினத்தில் நகா்புற ஏழை மக்களின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்க வேண்டும்.

- மாநகராட்சியின் 2007-08 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் திட்டப்பணிகளுக்கான ஒதுக்கீட்டில் 27% நிதி நகா்புற ஏழை மக்களின் மேம்பாடு திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணா்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சீா் திருத்தங்களை (Reforms) செயல்படுத்த தேவைப்படும் கூடுதல் கால அவகாசத்துடன் கூடிய திருத்திய சீா்திருத்த அட்டவணை (Revised Reforms Agenda) தற்பொழுது மத்திய நகா்புற வளா்ச்சித் துறையினரால் வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சீா்திருத்தங்கள் மேற்கொள்ள திருத்திய கால அட்டவணை விபரம் பின்வருமாறு:

## தவிா்க்கலாகாத சீா்திருத்தங்கள் ( MANDATORY REFORMS)

| வ. எண். | சீா்திருத்தங்களின் விபரம் | குறியீடு |
|---|---|---|
| 1. | மாநகராட்சியின் அனைத்து துறைகள் மற்றும் சேவைகளுக்கும் கணினி மூலம் மின்னனு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துதல். | தற்பொழுது சொத்து வரி, பிறப்பு-இறப்பு பதிவுகள், கட்டிட உரிமம், பணியாளா்களின் விபரம் மற்றும் வளா்ச்சிப் பணிகள் விவரம் உள்ளிட்ட பல்வேறு விவரங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு பணம் /காசோலை மூலம் வரி செலுத்தும் இயந்திரங்கள், குரல் மூலம் தகவல் அறியும் வசதி மற்றும் இணைய தளம் மூலம் வரி செலுத்தும் வசதி ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு முதல் திடக்கழிவு மேலாண்மை பணியில் பயன்படுத்தப்படும் வாகனங்களை புவியியல் இருப்பிட தகவல் பெறும் முறை (G.P.S) மூலம் கண்காணிக்கவும், கைரேகை பதிவின் மூலம் பணியாளா்களின் வருகையை கண்காணிக்கும் முறையும் முன்னேற்றத்தில் உள்ளது.<br><br>ஐந்தாம் ஆண்டில் புவியியல் தகவல் தொழில்நுட்ப (G.I.S) மூலம் சொத்து வரி ஆவணங்களை பராமரிக்கும் பணி நடைமுறைப்படுத்தப்படும். |
| 2 | I. மாநகராட்சியின் வரவு-செலவு கணக்குகளை இயல்பு நிலை கணக்குகள் மற்றும் இரட்டைப் பதிவு முறையில் பேணுதல். | 01.04.2000 முதல் நடை முறைப் படுத்தப்பட்டுள்ளது. |
| | II. மாநகராட்சி கணக்குகளை வெளித் துறையினா் மூலம் தணிக்கை செய்தல். | ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. |
| | III. பலன்கள் அடிப்படையில் வரவு செலவுத் திட்டம் (Out Come Budget) தயாரித்தல் . | நான்காம் ஆண்டில் ( 2008-2009) செயல்படுத்தப்படும். |
| | IV. உள் தணிக்கை மற்றும் கட்டுப்பாடு முறைகளை ஏற்படுத்துதல் | ஐந்தாம் ஆண்டில் ( 2009-2010) செயல்படுத்தப்படும். |
| | V. நிதித்திறன் மதிப்பீடு Credit Rating) செய்தல். | மூன்றாம் ஆண்டில் (2007-2008) முடிக்கப்படும். |
| | VI. கொள்முதல், திட்டப்பணிகள், பணியாளா்களின் ஊதியப்பட்டியல்கள், இருப்புக் கணக்குகள், உபயோகிப்பாளா் கட்டணங்கள், வரி வசூல் ஆகிய பணிகளை நிதி நிா்வாகக் கணக்குடன் இணைத்தல். | நான்காம் ஆண்டில் (2008-2009) செயல்படுத்தப்படும். |

| | | |
|---|---|---|
| 3 | **சொத்துவரி விதிப்பு மற்றும் வசூல் திறனை மேம்படுத்துதல்.** | |
| | **I.** மாநகர எல்லையில் உள்ள அனைத்து கட்டிடங்களையும் விடுதலின்றி வரி விதிப்பிற்குள் கொண்டு வருதல். | திட்டத்தின் நான்காம் ஆண்டில் (2008-2009)அனைத்து கட்டிடங்களுக்கும் விடுதலின்றி வரி விதிக்கப்படும். |
| | **II.** கட்டிடங்களுக்கான வரி விலக்குகளை நீக்குதல். | ஐந்தாம் ஆண்டில் (2009-2010) நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| | **III.**சொத்து வரி செலுத்துவோர் சுயமாக வரி கணக்கிட்டு வரி விதிப்பு செய்து கொள்ளும் முறையை அமல்படுத்துதல் | ஐந்தாம் ஆண்டில் (2009-2010) நிறைவேற்றப்படும் |
| | **IV.**புவியியல் தகவல் தொழில் நுட்பம் அடிப்படையில் சொத்து வரி ஆவணங்கள் பேணுதல். | ஐந்தாம் ஆண்டில் (2009-2010) நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| | **V.** சொத்து கள் வழிகாட்டு மதிப்புகளை மறு நிர்ணயம் செய்தல். | ஐந்தாம் ஆண்டில் ( 2009-2010) நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது |
| | **VI.** வரி செலுத்துவதின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் முகாம்கள் நடத்துதல். | நான்காம் ஆண்டில் ( 2008-2009) (சொத்து வரி சீராய்வுடன்) நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| | **VII.** உரிய காலத்தில் தவறாது வரி செலுத்துபவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல். | ஐந்தாம் ஆண்டு (2009-2010) முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |
| | **VIII.** மக்கள் தொகை அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள மொத்த கட்டிடங்களில் 85%க்கு குறையாமல் வரி விதிப்பின் கீழ் கொண்டு வருதல். | தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. |
| | **IX.** மொத்த வரி கேட்பில் 90% அளவில் வரி வசூல் நடவடிக்கைகளை மேம்படுத்துதல் | நான்காம் ஆண்டில் (2008-2009) 90%ஆகவும், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 95% ஆகவும் வரிவசூல் மேம்படுத்தப்படும். |
| | **X.** வசூல் செய்யப்படாமல் உள்ள நிலுவைக் கேட்பு, நடப்பு கேட்பில் 10-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | மூன்றாம் ஆண்டில் (2007-2008) நிலுவைகள் நடப்புக் கேட்பில் 40%-க்கு மிகாமலும், நான்காம் ஆண்டில் (2008-2009) 30% மிகாமலும், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 20%ற்கும், ஆறாம் ஆண்டில் (2010-2011) 10%-க்கு மிகாமலும் குறைக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 4. | **மாநகராட்சியால் வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதாள சாக்கடை வசதிகளுக்கான சேவை கட்டணத்தை பராமரிப்பு செலவுகளையாவது ஈடுசெய்யும் வகையில் சீரமைத்தல்.** | |
| | **I.** குடிநீர் விநியோகம், கழிவு நீரகற்றல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பராமரிப்பு செலவினை அறியும் வகையில் கணக்குகள் பராமரித்தல். | தற்போது நடைமுறையில் உள்ளது. |
| | **II.** மக்களுக்கு தினமும் 135 லிட்டர் நீர் வழங்குதல். | தற்போது நடைமுறையில் உள்ளது. |
| | **III.** ஒவ்வொரு சேவைக்கும் தேவையான அளவு கட்டணம் விதித்தல் | தற்போது குடிநீர் விநியோக கட்டணம் உயர்த்துவதற்கும் திடக்கழிவு மேலாண்மை சேவைக்குரிய கட்டணம் விதித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது நான்காம் ஆண்டு (2008-2009) செயல்படுத்தப்படும்.<br><br>பாதாள சாக்கடை திட்ட வசதிக்கு சேவைக் கட்டணம் விதிக்க ஐந்தாம் ஆண்டு (2009-2010) நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| | **IV.** குடிநீர் இணைப்புகள் அனைத்திற்கும் அளவுமானிகள் பொருத்துதல். | ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. |
| | **V.** வருவாய் தராத, கணக்கில் வராத குடிநீர் விநியோகங்களைக் குறைத்தல். | நான்காம் ஆண்டில் (2008-2009) நிறைவேற்றப்படும். |
| | **VI.** சேவைகளுக்கு வழங்கப்படும் சலுகைக் கட்டணங்களைக் குறைத்தல். | ஐந்தாம் ஆண்டில் (2009-2010) நிறைவேற்றப்படும். |

| | | |
|---|---|---|
| | **VII.** பராமரிப்புச் செலவுகளை ஈடு கட்டும் வகையில் கட்டணங்கள் விதித்தல்.<br><br>(1) குடிநீர் விநியோகம். | மாமன்றத்தின் தீர்மான எண்.78, நாள்.23.07.07-ல் அங்கீகரிக்கப்பட்ட புதிய குடிநீர் கட்டணங்களின் அடிப்படையில் நான்காம் ஆண்டில் (2008-2009) 85% ம், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 90%ஆறாம் ஆண்டில் (2010-2011) 95%ம், ஏழாம் ஆண்டில் (2011-2012) 100% முழுமையாக வசூல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| | (2) திடக்கழிவு மேலாண்மை திட்டம் | மாமன்றத்தின் தீர்மான எண்.84, நாள்.24.09.07-ல் அங்கீகரிக்கப்பட்ட புதிய சேவை கட்டணங்களின் அடிப்படையில் நான்காம் ஆண்டில் (2008-2009) 25% ம், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 50%/ ஆறாம் ஆண்டில் (2010-2011) 75%ம். ஏழாம் ஆண்டில் (2011-2012) 100% முழுமையாக வசூல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | (3) பாதாள சாக்கடை. | நான்காம் ஆண்டில் (2008-2009) 40% ம், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 65%, ஆறாம் ஆண்டில் (2010-2011) 80%ம். ஏழாம் ஆண்டில் (2011-2012) 100% முழுமையாக வசூல் செய்ய நடவடிக்கை உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 5. | **நகர்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் வகையில் மாநகராட்சியின் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்தல்.** | |
| | அ) மொத்த வருவாய் வரவினத்தில் நகர்புற ஏழைகள் மேம்பாட்டு பணிகளுக்கு நிதி ஒதுக்குதல் | மூன்றாம் ஆண்டில் (2007-2008) 13 விழுக்காடும், நான்காம் ஆண்டு (2008-2009) முதல் 15 விழுக்காடு ஒதுக்கீடும் தொடர்ந்து செய்யப்படும். |
| | ஆ) சொந்த வருவாய் நிதி ஆதாரங்களிலிருந்து நகர்புற ஏழைகள் மேம்பாட்டு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல். | மூன்றாம் ஆண்டில் (2007-2008) 19 விழுக்காடும், நான்காம் ஆண்டு (2008-2009) முதல் 21 விழுக்காடும் தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும். |
| | இ) திட்ட பணிகளுக்கான ஒதுக்கீட்டில் நகர்புற ஏழைகள் மேம்பாட்டு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல். | மூன்றாம் ஆண்டில் (2007-2008) 27 விழுக்காடும், நான்காம்ஆண்டு (2008-2009) முதல் 30 விழுக்காடும் தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும். |
| 6. | **நகர்புற ஏழை மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளுதல்.** | |
| | அத்தியாவசிய அடிப்படை வசதிகள் செய்து தருதல்.<br><br>அ) குடிநீர் வசதி<br>குழாய் இணைப்புகள் மூலம் குடிநீர் வழங்குதல். | நான்காம் ஆண்டில் (2008-2009) 60% ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 70% , ஆறாம் ஆண்டில் (2010-2011) 90%, ஏழாம் ஆண்டில் (2011-2012) 100% மக்கள் பயன்பெறும் வகையில் குழாய் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். |
| | பொது குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குதல். | அனைத்து குடியிருப்புகளுக்கும் இணைப்புகள் வழங்கப்படுவதால் பொது குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குவது நான்காம் ஆண்டில் (2008-2009) 50%ஆகவும், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 40%ஆகவும், ஆறாம் ஆண்டில் (2010-2011) 30% ஆகவும் , ஏழாம் ஆண்டில் (2011-2012) 20% ஆகவும் குறைக்கப்படும். |
| | ஆழ் துளை கிணறுகள் மூலம் சுத்திகரிக்கப்படாத தண்ணீர் வழங்குதல். | தற்போது வழங்கப்பட்டு வருகிறது. |
| | லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல் | அனைத்து குடியிருப்புகளுக்கும் இணைப்புகள் வழங்கப்படுவதால் லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவது நான்காம் ஆண்டில் (2008-2009) 30%ஆகவும், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 20%ஆகவும், ஆறாம் ஆண்டில் (2010-2011) 10% ஆகவும் குறைக்கப்படும். ஏழாம் ஆண்டில் (2011-2012) மொத்தமாக நிறுத்தப்படும். |
| | ஆ) சுகாதாரம்<br><br>எல்லா வீடுகளிலும் கழிப்பிடங்கள் கட்டித் தருவதால் பொது கழிப்பிடங்களின் எண்ணிக்கையை குறைத்தல் | நான்காம் ஆண்டில் (2008-2009) 60%, பொது கழிப்பிடங்களும், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 70% பொது கழிப்பிடங்களும், ஆறாம் ஆண்டில் (2010-2011) 90% பொது கழிப்பிடங்களும் , ஏழாம் ஆண்டில் (2011-2012) 100% பொது கழிப்பிடங்களும் குறைக்கப்படும். |

| | | |
|---|---|---|
| | நவீன சுகாதார வளாகங்கள் கட்டித் தருதல். | நான்காம் ஆண்டில் (2008-2009) 60% மக்களும், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 70% மக்களும், ஆறாம் ஆண்டில் (2010-2011) 90% மக்களும், ஏழாம் ஆண்டில் (2011-2012) 100% மக்களும் பயனபெறும் வகையில் நவீன சுகாதார வளாகங்கள் புதியதாக கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது. |
| | இ) குடியிருப்புகள்.<br>புதிய ஆர்.சி.சி. கூரையுடன் கூடிய வீடுகள் கட்டித் தருதல். | நான்காம் ஆண்டில் (2008-2009) 1500 வீடுகளும், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 15,000 வீடுகளும் , ஆறாம் ஆண்டில்(2010-2011) 5,730 வீடுகளும் ஆக மொத்தம் 22,230 வீடுகள் கட்டித் தர திட்டமிடப்பட்டுள்ளது |
| | **உட் கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல்.**<br>அ) திடக்கழிவு மேலாண்மை.<br>சாலைகள் மற்றும் தெருக்களை சுத்தம் செய்தல். | தினமும் சுத்தம் செய்யும் பணி தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| | குப்பைகளை சேகரம் செய்தல் | தினமும் குப்பைகளை சேகரம் செய்யும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது |
| | ஆ) சாலைகள் மற்றும் வடிகால் வசதிகள் | குடிசைப் பகுதி சாலைகள் அனைத்தும் ஐந்தாம் ஆண்டு (2009-2010) இறுதிக்குள் முழுமையாக மேம்படுத்தப்படும்.<br>குடிசைப் பகுதிகளில் ஐந்தாம் ஆண்டு (2009-2010) இறுதிக்குள் முழுமையான வடிகால் வசதி செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது. |
| | இ) தெரு விளக்குகள் | குடிசைப் பகுதிகளில் முழுமையாக தெரு விளக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. |
| | ஈ) சமுதாயக் கூடங்கள். | ஐந்தாம் ஆண்டு (2009-2010) இறுதியில் தேவையான சமுதாயக் கூடங்கள் கட்டித் தர திட்டமிடப்பட்டுள்ளது. |
| | உ) ஆரம்ப சுகாதார நிலையங்கள் | வருமுன் காப்போம், கர்ப்பிணி பெண்களுக்கு நிதி உதவி போன்ற பல்வேறு திட்டங்கள் நடைமுறையில் உள்ளது. |
| | ஊ) ஆரம்ப கல்வி நிலையங்கள் | அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் இடைநிறுத்தம் முற்றிலும் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. |
| | எ) வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல்.<br>ஓவ்வொரு குடும்பத்திலும் ஒரு நபருக்காவது தொழில் பயிற்சி அளித்தல். | ஐந்தாம் ஆண்டில் (2009-2010) முழுமையாக பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | தனி நபர் கடன் வழங்குதல் | ஐந்தாம் ஆண்டு (2009-2010) முழுமையாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| | ஏ) சொந்த குடியிருப்புகள் வழங்குதல்.<br>சொந்த குடியிருப்புகள் வழங்குதல். | மூன்றாம் ஆண்டில் (2007-2008) 20%, நான்காம் ஆண்டில் (2008-2009) 50%, ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 75% , ஆறாம் ஆண்டில் (2010-2011) 100% மக்களுக்கும் முழுமையாக நிரந்தரக் குடியிருப்புகளுக்கு உத்திரவாதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| | குடியிருப்பு பகுதியிலேயே தொழில் செய்ய உத்திரவாதம். | மூன்றாம் ஆண்டில் (2007-2008) 5% மக்களுக்கும் நான்காம் ஆண்டில் (2008-2009) 10% மக்களுக்கும் ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 15% மக்களுக்கும் ஆறாம் ஆண்டில் (2010-2011) 20% மக்களுக்கும், ஏழாம் ஆண்டில் (2011-2012) 25% மக்களுக்கும் குடியிருப்பு பகுதியிலேயே தொழில் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## தன் விருப்ப சீா்திருத்தங்கள் ( OPTIONAL REFORMS)

| வ.எண். | சீா்திருத்தங்களின்விபரம் | குறியீடு |
|---|---|---|
| 1. | நிா்வாக சீா்திருத்தங்கள்.<br>1. பணியாளா் செலவுகளை குறைத்தல். | நான்காம் ஆண்டில் (2008-2009) 1.60% ம், ஐந்தாம் ஆண்டில் (2009-2010) 2%ம் , ஆறாம் ஆண்டில் (2010-2011) 2.4%ம், ஏழாம் ஆண்டில் (2011-2012) 2.8% ம் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 2. | உள் கட்டமைப்பு சீா்திருத்தங்கள்<br>1. தற்போதைய தேவைக்கேற்றபடி பணியாளா் அமைப்புகளைச் சீா் செய்தல், அதிகாரங்களைப் பரவலாக்கம், பணியாளா்களுக்கும் போதிய பயிற்சிகள் அளித்தல். | நான்காம் ஆண்டில் (2008-2009) செயல்படுத்தப்படும் . |
| 3. | பொது மக்கள் மற்றும் தனியாா் கூட்டு முயற்சியில் திட்டங்களை நிறைவேற்றுதல் | இந்த ஆண்டு (2007-2008) திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைந்துள்ள வளாகத்தினுள் வீடுகளில் இருந்து தரம் பிரிக்கப்பட்ட நிலையில் குப்பைகளை பெறவும் சுகாதார கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளும் பணியினை பொது மக்கள் - தனியாா் கூட்டு முயற்சியில் நிறைவேற்றும் பணி நடைபெற்று வருகிறது. மின்சாரம் சேமிப்பு திட்டம் மூலம் தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை தனியாா் மூலம் செயல்படுத்தி இதனால் பெறப்படும் மின் கட்டண சேமிப்பை உரிய விகிதாச்சாரத்தில் பங்கீடு செய்து கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. |

மேற்கொள்ளப்பட்டுள்ள நிா்வாக சீா்திருத்தங்கள் மன்றத்தின் தகவலுக்கும் இனி மேற்கொள்ளப்படவுள்ள சீா் திருத்தங்களுக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் 8251/ 2005/ எம்.டி.3.

**மாநகர மன்ற தீா்மானம் எண். 233 நாள்: 21.1.08**

மத்திய, மாநில அரசுகள் மற்றும் கோவை மாநகராட்சி இடையே 29.07.06 அன்று கையொப்பமிடப்பட்ட சீா்திருத்தங்கள் அடங்கிய மெமோரண்டம் ஆப் அக்ரீமெண்ட்-(MOA) ஐ பதிவு செய்யவும், மேற்கண்ட அலுவலகக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள சீா்திருத்த அட்டவணையின்படி சீா்திருத்தங்களை செயல்படுத்தவும் தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

**பொருள் எண் : 25**

ஜவஹா்லால்நேரு தேசிய நகா்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூா் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ. 96.51 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையிற்கு மத்திய நகா்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் “ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு” கடந்த 02-02-2007-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசாணை 160 (டி) ந.நி.மற்றும் குடிநீா் வழங்கல் துறை ( மா.ந. – II ) துறை நாள் 17-04-2007-ல் நிா்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் இம்மாநகராட்சியால் செயல்படுத்தப்படவுள்ள முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு மாநகர பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து குடியிருப்புகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து இருப்பு வைப்பதற்கு இம்மாநகராட்சியால் இரண்டு குப்பை கூடைகளை (பச்சை நிறத்தில் ஒன்று மற்றும் வெள்ளை நிறத்தில் ஒன்று) இலவசமாக வழங்கப்படவுள்ளது. அதற்கு தேவையான 10 லிட்டா் கொள்ளவு கொண்ட 2,29,000 ஜோடிகள் பாலி எத்திலின் குப்பை கூடைகளை வாங்குவதற்கென ரூ.117,21,000/- உத்தேச ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு முதலாவது அழைப்பாக கடந்த 07-09-2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப ரீதியாக தேர்ச்சிபெற்றதினை தொடர்ந்து அவர்களின் விலைப்புள்ளிகள் அடங்கிய உறை திறக்கப்பட்டன. இரண்டு நிறுவனங்களும் உத்தேச மதிப்பீட்டை காட்டிலும் அதிகமாக கோரியதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் அனுமதியினை கோரப்பட்டது. இம்மாமன்றம் தனது தீர்மான எண் 185 நாள் 30-10-2007 ல் தரமான குப்பை கூடைகளை வாங்கி வழங்கும் வண்ணம் மதிப்பீட்டு தொகையினை உயர்த்தி நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது . அதற்காகும் கூடுதல் செலவினத்தை ஏற்கவும் அனுமதி வழங்கியுள்ளது. மேற்கூறிய மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப கூறுகளுடனான தரமான குப்பை கூடைகளை வாங்கும் வண்ணம் திருத்திய மதிப்பீடு ரூ.356,00,000/- தயாரிக்கப்பட்டு இரண்டாவது அழைப்பாக கடந்த 29-11-2007 அன்று ஒப்பந்தபுள்ளிகள் வரவழைக்கப்பட்டது. கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. தி / ள். பிரபுதயால் ஓம்பிரகாஷ், புது டெல்லி.
2. தி / ள். சின்டெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், சென்னை.
3. தி / ள். ஆவத் ரப்பர் லிமிடெட், டேராடூன்

பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1 மற்றும் வரிசை எண் 2 ல் கண்ட நிறுவனங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே தொழில்நுட்ப ரீதியாக தேர்ச்சி பெற்றதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு உறுப்பினர்களின் முன்னிலையில் 17-12-2007 அன்று மேற்படி நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகள் திறக்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. தி/ள். பிரபுதயால் ஓம்பிரகாஷ், புது டெல்லி. | : | ரூ.292,38,720/-. |
| 2. தி/ள். சின்டெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், சென்னை | : | ரூ.365,48,400/-. |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தி/ள். பிரபுதயால் ஓம்பிரகாஷ், புது டெல்லி நிறுவனத்தாரால் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ரூ.292,38,720/- குறைவானதாகும். மேற்படி பணிக்கு இது இரண்டாவது அழைப்பாக உள்ளதாலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மத்திய அரசு நிர்ணயித்த காலகெடுவுக்குள் செய்து முடிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாலும், அவசர அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு அதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே தி/ள். பிரபுதயால் ஓம்பிரகாஷ், புது டெல்லி நிறுவனத்தாரால் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ.292,38,720/- யினை ஏற்று அனுமதிக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் : **11343/2007/** எம்.டி.**3**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 234 நாள்: 21.1.08**

பொருளில் குறிப்பிட்டுள்ள குப்பை கூடைகளை வழங்க இறுதி பணி உத்திரவு வழங்குவதற்கு முன்பு, மாதிரி குப்பைக் கூடைகளைப் பெற்று, தரத்தை உறுதி செய்து கொள்ளவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் :26**

ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ. 96.51 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையிற்கு மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் "ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு" கடந்த 02-02-2007-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசாணை 160 (டி) ந.நி.மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( மா.ந. – II ) துறை நாள் 17-04-2007-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் இம்மாநகராட்சியால்

செயல்படுத்தப்படவுள்ள முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான 12 எண்ணிக்கைகள் சிறிய வகை டிப்பர் லாரிகளை வாங்குவதற்கென ரூ. 86.94 இலட்சம் ( ரூ. 0.8694 கோடி ) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு முதலாவது அழைப்பாக கடந்த 07-09-2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இரண்டாவது அழைப்பாக ஒப்பந்தபுள்ளி கோரியதில் கடந்த 29-11-2007 அன்று மீண்டும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அது பின்வருமாறு.

1) தி / ள் டாடா மோட்டார்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப ரீதியாக தேர்ச்சி பெற்றதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு உறுப்பினர்களின் முன்னிலையில் 17-12-2007 அன்று மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளிகள் அடங்கிய உறை திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | தி/ ள் டாடா மோட்டார்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் | : | ரூ. 87,58,476.00 (மதிப்பீட்டைகாட்டிலும் 4.27% அதிகம்) |

மேற்கண்ட நிறுவனத்தாரால் கொடுக்கப்பட்டிருந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைகாட்டிலும் 4.27% அதிகமாக இருந்தமையால் மேற்படி நிறுவனத்தாரை விலையை குறைத்து கொடுக்க (Negotiations) கேட்டுக்கொண்டு அதன் பின்னர் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்யலாம் என ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிந்துரை செய்தது. இதனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தாரை விலையை குறைத்து கொடுக்க கேட்டுக் கொண்டதில் அந்நிறுவனத்தார் அவர்களது 24-12-2007 தேதியிட்ட கடிதத்தில் மேற்படி பணிக்கு ரூ. 86,32,800.00 என குறைத்து கொடுக்க இசைவு தெரிவித்தனர். அவ்வாறு விலை குறைப்பு செய்யப்படுவதால் அவர்களால் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை காட்டிலும் 2.77% அதிகமானதாக அமையும். மேற்படி பணிக்கு இது இரண்டாவது அழைப்பாக உள்ளதாலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மத்திய அரசு நிர்ணயித்த காலகெடுவுக்குள் செய்து முடிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாலும், அவசர அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே தி/ள் டாடா மோட்டார்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் நிறுவனத்தாரால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி ரூ. 86,32,800.00 (மதிப்பீட்டை காட்டிலும் 2.77% அதிகம்) யினை ஏற்று அனுமதிக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண் : **13087 /2006/ எம்.டி.3**

**மாநகர மன்ற தீர்மானம் எண். 235 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

2007-08 ம் நிதி ஆண்டு முடியும் தருவாயில் இருப்பதால் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், அவசர அவசியத்தை கருதியும், மாட்டு வண்டிகளை முற்றிலுமாக அகற்ற வேண்டியுள்ளதால் பொருளில் குறிப்பிட்டுள்ள தி.ள் டாடா மோட்டார்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர், நிறுவனத்திடமிருந்து பொருளில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்திலேயே கூடுதலாக 12 எண்ணிக்கைகள் சிறிய வகை டிப்பர் லாரிகளை வாங்கவும், தீர்மானிக்கப்பட்டது. கூடுதலாக வாங்கப்படும் 12 சிறிய வகை டிப்பர் லாரிகளுக்கு ஆகும் செலவினத்திற்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் :27**

அரசாணை எண் ( 2டி ) எண் 105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை துணை ( எம். II ) நாள் 26-06-2007-ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு புதியதாக 52 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது. பணியிடத்திற்கான செலவினத்தை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது.

புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள 52 பணியிடங்களில் பொறியியல் பிரிவில் கீழ்காணும் உயர் அலுவலர்கள் பணிபுரிய உள்ளார்கள்.

1) கண்காணிப்பு பொறியாளர் - 1 பணியிடம்
2) செயற் பொறியாளர் - 2 பணியிடம்
3) உதவி செயற் பொறியாளர் - 4 பணியிடம்
4) நகர திட்ட அலுவலர் - 1 பணியிடம்

திட்ட பணிகளை பார்வையிடவும் அலுவலக உபயோகத்திற்கும் உயர் அலுவலர்கள் பயன்படுத்த வாகனங்கள் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது.

மேற்காணும் அலுவலர்கள் பயன்படுத்த போதிய வாகனங்கள் மாநகராட்சிவசம் இல்லாததால், பணியமர்த்தப்படும் கீழ்காணும் அலுவலர்களுக்கு கீழ் குறிப்பிட்டுள்ளபடி வாகனங்கள் ரூ. 60.00 இலட்சம் செலவில் டி.ஜி.எஸ்.டி. ( DGS&D ) விலைவிகிதத்திலோ அல்லது அரசிற்கான நிர்ணயிக்கப்பட்ட சிறப்பு விலை விகித நிர்ணயித்திலோ வாங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | அலுவலர் பதவி | வாகன விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1) | கண்காணிப்பு பொறியாளர் | அம்பாசிடர் கார் | 1 வாகனம் |
| 2) | செயற் பொறியாளர் | மகேந்திரா பிலோரா ஜீப் ( SLX or SLE ) | 2 வாகனங்கள் |
| 3) | உதவி செயற் பொறியாளர் | மகேந்திரா பிலோரா ஜீப் ( DI ) | 4 வாகனங்கள் |
| 4) | நகரத்திட்ட அலுவலர் | மகேந்திரா பிலோரா ஜீப் ( DI ) | 1 வாகனம் |

அலுவலகக்குறிப்பு :

அ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்ட அலுவலர்களுக்கு தேவைப்படும் வாகனங்கள் வாங்க செலவாகும் ரூ. 60.00 இலட்சம் நிதியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் , திட்ட நிதி பெறப்பட்டவுடன் நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து வாகனங்கள் வாங்கும் செலவினத்தினை ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி வாகனங்கள் வாங்க உத்தேச தொகையாக ரூ.60.00 இலட்சம் செலவாகும். மேற்படி வாகனங்களை வாகன உற்பத்தியாளரிடமிருந்து நேரிடையாகவோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் வாகன விற்பனையாளரிடநமிருந்து ( DGS&D ) விலையிலோ அல்லது அரசுத் துறை நிறுவனங்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட சிறப்பு விலையிலோ இந்த மூன்றில் எது குறைவாக உள்ளதோ அதில் வாங்கலாம்.

இ) வாகனங்களை ஓட்டுவதற்குரிய வாகன ஓட்டுநர்கள் TEXCO மூலம் பணியில் அமர்த்தலாம். வாகன ஓட்டுநர்களுக்கான ஊதியத்தை திட்ட நிதியிலிருந்து செலவழிக்கலாம்.

ந.க.எண் : 17757 /2007/JN1

**மாநகர மன்ற தீர்மானம் எண். 236 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு 'அ' 'ஆ' 'இ' அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :28

பொருள்- குத்தகை இனங்கள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - குத்தகை இனங்களுக்கு 2008-09-ம் ஆண்டுக்கு 1.4.08 முதல் 31.3.09 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு கட்டணம் வசூலிக்க உரிமம் வழங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - குறித்து.

------------

<u>குத்தகை இனங்கள் விபரம்-</u>

1) பன்னீர்செல்வம் பூ மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமை (28 நிரந்தரக் கடைகள், 144 மேடைக்கடைகள் நீங்கலாக)
2) மேட்டுப்பாளையம் ரோடு தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை.
3) மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கனி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை.
4) ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப் பள்ளி அருகிலுள்ள வாழைக்காய் மொத்த வியாபார மண்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
5) பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
6) மேட்டுப்பாளையம் ரோடு காய்கனி மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
7) மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
8) தடாகம் ரோடு நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
9) காந்திபார்க் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
10) காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
11) மேட்டுப்பாளையம் ரோடு எடை மேடையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
12) திவான் பகதூர் ரோடு மாநகராட்சி பள்ளி வளாக மைதானத்தில் வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமை.

எனவே மேற்படி இனங்களை 2008-09-ம் ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை அச்சகத்தில் அச்சிடவும், தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதன் பொருட்டு உண்டாகும் செலவினங்களை மாநகராட்சி ஏற்றுக் கொள்ளவும், மறு ஏலம் கோரும் இனங்களை அவ்வப்போது செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யவும், அதற்குண்டான விளம்பரக் கட்டணங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண்:29/ 2008/ அ1 மே

### மாநகர மன்ற தீர்மானம் எண். 237 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :29

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - பிரிவு 1 – வார்டு எண் 25-க்குட்பட்ட ஒசூர்சாலையில் தரைதளத்தில் கட்டப்பட்டு வரும் தெற்குமண்டல அலுவலக கட்டிடத்தில் ‘சி’ பிளாக் முதல் தளம் கட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/- க்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

உதவி நிர்வாகப்பொறியாளர் / தெற்கு, நிர்வாகப்பொறியாளர் /மேற்கு, தெற்கு மண்டல தலைவர் மற்றும் உதவி ஆணையர் அவர்களின் உத்தரவுப்படி தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். இச்செலவினத்தை வரும் நிதியாண்டில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண். 21019/07/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண். 238 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 30**

கோவை மாநகராட்சியில் தற்பொழுது துப்புரவு பணியாளர்களுக்கான குடியிருப்புகள் போதுமானதாக இல்லை. எனவே இவர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு நடப்பு நிதியாண்டில் ரூ. 10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோவை மாநகராட்சி தெற்குமண்டலம், வார்டு எண் 54-ல் உள்ள உக்கடம் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அடிப்படை வசதிகளான குடிநீர் விநியோகம், மின்சார வசதி, பாதாள சாக்கடை வசதி, மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், அணுகு சாலை, பூங்கா, விளையாட்டுத்திடல் மற்றும் பிற வசதிகளுடன் சுற்றுசுவர் அமைத்து அதில் தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய 8 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் 10 எண்ணிக்கைகளை கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ. 5,00,00,000/- . இதற்கு நிர்வாக அனுமதி வேண்டி அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் பிரேரணை அனுப்ப அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 274/08/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண். 239 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 31**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - பிரிவு 1 – வார்டு எண் 25க்குட்பட்ட ஒசூர்சாலையில் தெற்குமண்டல அலுவலக கட்டிடத்தின் முதல் தளம் 'ஏ' பிளாக் கட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/- க்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

உதவி நிர்வாகப்பொறியாளர் / தெற்கு, நிர்வாகப்பொறியாளர் /மேற்கு, தெற்கு மண்டல தலைவர் அவர்களின் உத்தரவின்படி தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். இச்செலவினத்தை வரும் நிதியாண்டில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண். 21021/07/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண். 240 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 32

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - பிரிவு –1 வார்டு எண் 25 ஒசூர்சாலையில் தெற்குமண்டல அலுவலக கட்டிடத்தின் 'பி' பிளாக் முதல் தளம் கட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/- க்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

உதவி நிர்வாகப் பொறியாளர் / தெற்கு, நிர்வாகப் பொறியாளர்/ மேற்கு, தெற்கு மண்டல தலைவர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோரின் உத்தரவின்படி தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். இச்செலவினத்தை வரும் நிதியாண்டில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண். 21020/07/எம்.டி.4

## மாநகர மன்ற தீர்மானம் எண். 241 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 33

பொருள் - கோவை மாநகராட்சி - தெற்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள வருடாந்திர உரிம இனங்களை – 2008 – 2009 ம் ஆண்டிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளிகள் முலம் ஒதுக்கீடு செய்யப்படவேண்டியுள்ளது.

*ஏல இனங்கள்*

1. தியாகி குமரன் மார்கெட்டில் தரைக்கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
2. ராமர் கோவில் வீதி மார்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
3. போத்தனூர் ரோடு, லாரிபேட்டை மொத்த வியாபார மீன் மார்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
4. போத்தனூர் ரோடு, லாரிபேட்டையில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
5. தியாகி குமரன் மார்கெட்டின் உட்புறத்தில் உள்ள இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
6. உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
7. காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
8. காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
9. காந்திபுரம் மத்தியபேருந்து நிலையத்தில் தரைத்தளம் கேரேஜ் பகுதி மற்றும் 5வது தளம் பகுதியில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தக்கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
10. காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்களை நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் (கடை உரிமைதாரர்களுக்கு வாகன நிறுத்த ஒதுக்கப்பட்ட பகுதி நீங்கலாக)
11. இராஜவீதியில் மருந்தக வளாகத்தில் இரு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

12. மத்திய பேருந்து நிலையம் இரவு மட்டும் தங்குவதற்கு மற்றும் பொருட்கள் பாதுகாப்பதற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

13. வ.உ.சி. பூங்காவில் மிருக காட்சி சாலைக்கு நுழைவு கட்டணம் மற்றும் சிறுவர் விளையாடுமிடம் இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

14. வ.உ.சி. பூங்கா சிறுவர் ரயில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

15. தியாகி குமரன் மார்கெட் மத்தியில் அமைந்துள்ள ரோட்டின் கிழபுறத்தில் தென்வடலாக உள்ள இடத்தில் சைக்கிள் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிட கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

16. ஆடு அறுவை மனை ,உக்கடம்.

17. நவீன பொதுக்கழிப்பிடம், லிங்கப்பசெட்டி வீதி

18. நவீன பொதுக்கழிப்பிடம், தியாகி குமரன் மார்க்கெட்

19. நவீன பொதுக்கழிப்பிடம்,மரக்கார நஞ்சப்பா வீதி

20. நவீன பொதுக்கழிப்பிடம்.உக்கடம் பேருந்து நிலையம்

21. நவீன பொதுக்கழிப்பிடம், போத்தனூர் ரோடு.லாரிபேட்டை

22. நவீன பொதுக்கழிப்பிடம். காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (ஆர்.வி.ஹோட்டல் அருகில்)

23. நவீன பொதுக்கழிப்பிடம். காந்திபுரம் மத்தியபேருந்து நிலையம் (தளம் 1.தளம் 2, தளம் 3. மற்றும் 4)

24. நவீன பொதுக்கழிப்பிடம் வ.உ.சி. பூங்கா வளாகம்

25. நவீன பொதுக்கழிப்பிடம். உப்பிலிபாளையம்

26. நவீன பொதுக்கழிப்பிடம்.டவுன்ஹால் அருகில்

27. நவீன பொதுக்கழிப்பிடம்,செட்டி வீதி

28. நவீன பொதுக்கழிப்பிடம், தர்மராஜா கோவில் வீதி

29. மாநகராட்சி எல்லையில் உள்ள 48 புளியமரங்களில் காய்க்கும் புளியங்காய்களை பறித்துக்கொள்ளும் உரிமம்.

30. உக்கடம் ஆடு அறுவை மனைக்கு மேல்புறம் ஓடும் சாக்கடை நீரைப்பயன்படுத்திக்கொள்ளும் உரிமம்.

31. வைசியாள்வீதியும், சுப்ரி வீதியும் சந்திக்கும் இடத்தில் ஓடும் சாக்கடை நீரைப்பயன்படுத்திக்கொள்ளும் உரிமம்.

32. கழிவுநீர்ப்பண்ணையில் உள்ள 154 தென்னை மரங்களில் விளையும் தேங்காய்களை பறித்துக்கொள்ளும் உரிமம்.

33. மாநகராட்சி தெற்கு மண்டல எல்லைக்குள் உள்ள 28 தென்னை மரங்களில் விளையும் தேங்காய்களை பறித்துக்கொள்ளும் உரிமம்.

34. பொருள் காப்பகம், உக்கடம் பேருந்து நிலையம்.

35. குரு ஹோட்டலின் அருகில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

36. நவீன பொதுக்கழிப்பிடம், காந்திபுரம் நகர பேருந்து நிலையம் பி-3 காவல் நிலையம் அருகில்.

<u>புதிதாக சேர்க்கப்படவேண்டிய இனங்கள்</u>

37. காந்திபுரம் பேருந்து நிலையத்தில் தொலைகாட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம்(மூன்று வருட ங்களுக்கு 1.4.2008 முதல் 31.3.2011 வரை)

38. தாமஸ் வீதி நவீன கழிப்பிடம் (தற்பொழுது மகளிர் சுயஉதவிக்குழு முலம் பராமரித்து வரும் கழிப்பிடத்தில்) கூடுதல் கட்டணம் வசூல் செய்வதாக பலமுறை புகார்கள் பெறப்பட்டுள்ளதால் இவ்வினத்தை பொது ஏலம் முலம் குத்தகைக்கு விடலாம்.

2007 -08 ம் ஆண்டு ஏல இனப்பட்டியலில் இருந்து 2008-09 ம் ஆண்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் இருந்து நீக்கம் செய்யவேண்டிய இனங்கள்.

| வ.எண் | 2007-08ம் ஆண்டு ஏல இனவரிசை எண் | இனம் |
|---|---|---|
| 1. | 19 | நவீன பொதுக்கழிப்பிடம் உக்கடம் (மீன்மார்கெட் அருகில்) |
| 2. | 39 முதல் 56வரை | கழிவுநீர்ப்பண்ணையில் பிளாக் எண் 1முதல் 22 வரை மற்றும் 49,50,51 மற்றும் 52 களில் புல் அறுத்துக்கொள்ளும் உரிமம். மேற்படி இடத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படவுள்ளதால் இதனை நீக்கம் செய்யப்படுகிறது. |

மேற்படி வரிசை எண் 1 முதல் 38 வரையிலான வருடாந்திர உரிம இனங்களை 2008-09 ம் ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோரலாம்.

இதில் மேற்குறிப்பிட்டுள்ள வரிசைஎண் 17 முதல் 28 மற்றும் 36 ல் உள்ள நவீனகட்டண கழிப்பிடங்களில் தற்பொழுது உரிமம் பெற்றுள்ள குத்தகைதாரா்கள் கூடுதல்கட்டணம் வசூலிப்பதாக புகாா்கள் தொடா்ந்து வரப்படுவதால் இக்கட்டணகழிப்பிடங்களை மகளிா் சுய உதவிக்குழுக்கள் மற்றும் தன்னாா்வ தொண்டு நிறுவனங்கள் மட்டும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

நீக்கம் செய்யப்பட வேண்டிய இரண்டு இனங்களை 2008 – 09ம் ஆண்டு ஏலப் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யலாம்.

ஏற்கனவே உள்ள பொது ஏல நிபந்தனைகளுடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஏல நிபந்தனைகளை சோ்க்கப்பட வேண்டியுள்ளது.

1. ஒதுக்கீடு பெற்ற குத்தகைதாரா் மேற்படி குத்தகை தொகைக்கான வருமான வரித் தொகையினை கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு செலுத்தப்பட்ட பின்னரே உரிமம் ஒப்படை செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| அ. | ரூ.10,00,000/- வரை | - | 2.04% |
| ஆ. | ரூ.10,00,000/-க்கு மேல் | - | 2.244% |

2. உயா்ந்தபட்ச ஏலக்கோரிக்கை கோரப்பட்ட இனங்களுக்கு மறு ஏலம் கோருவதற்கு இவ்வினத்திற்கு நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரா்களை அனுமதிக்கப்படமாட்டாது.

3. மறு ஏலம் கோருபவா்கள் மறு ஏலத்தொகையினை முழுவதுமாக செலுத்தி அதற்குரிய ரசீதுடன் மறு ஏலம் கோரப்படவேண்டும். முழுத்தொகை செலுத்தப்படாத கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேற்படி ஏல நிபந்தனை அறிக்கையினை 200 பிரதிகள் அச்சிட்டு பெறலாம். ஏல அறிக்கையினை நாளேடுகளில் விளம்பரம் செய்து, இதற்காகும் செலவினங்களை ஏற்கலாம். ஏலம் போகாத இனங்களுக்கு துறை முலம் வசூலிக்க தேவைப்படும் கட்டண ரசீதுகளை அச்சடித்துக்கொள்ளவும், இதற்காகும் செலவினங்களையும் ஏற்கலாம். உரிம இனங்களை ஏலம் விடவும் அதற்கான நிபந்தனைகளுக்கு ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அவசரஅவசியத்தை கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் முன்அனுமதி பெறப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க. எண் 11260/2007/அ10

**மாநகர மன்ற தீர்மானம் எண். 242 நாள்: 21.1.08**

பொருளில் வரிசை எண். 16 ல் குறிப்பிடப்பட்டுள்ள உக்கடம் ஆடு அறுவைமனை, புதிய ஆடு அறுவை மனைக்கு மாறுதல் செய்யப்படும்வரை ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பொருளில் வரிசை எண். 38 ல் குறிப்பிடப்பட்டுள்ள தாமஸ் வீதி நவீன கழிப்பிடம் தவிர்த்து ஏனைய இனங்களுக்கு அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 34**

பொருள்- குத்தகை இனங்கள் - கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் 2008-2009 ம் ஆண்டிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகை இனங்கள் ஒப்படைத்தல் - மற்றும் - பொது ஏல நிபந்தனைகள் மாமன்றத்தின் ஒப்புதல் பெறுதல் சார்பு.

---------------

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட 1 முதல் 5 முடிய உள்ள இனங்களுக்கு 1.04.08 முதல் 31.3.2009 முடிய உள்ள காலத்திற்கு ஏல இனங்களில் பெறப்படும் வருவாய் வசூலித்து கொள்வதற்கு உரிமம் வழங்க பொது ஏலம் / மறுஏலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டியுள்ளது.

<u>குத்தகை இனங்கள்:</u>

| | | |
|---|---|---|
| 1. | நவீன பொது கழிப்பிடம் கணபதி | - கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 2. | நவீன பொது கழிப்பிடம் சக்தி ரோடு | - கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 3. | நவீன பொது கழிப்பிடம் சீனிவாசபுரம் (காந்திபுரம்) | - கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 4. | சக்தி ரோடு புல்மார்க்கெட்டில் | - கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 5. | சக்தி ரோடு ஆடு/மாடு அறுவை மனையில் | - கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 6. | கோவை மாநகராட்சி வாகன நிறுத்தம் (கிராஸ் கட் ரோடு) | - கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 7. | சீனிவாசபுரம் தினசரி காய்கறி கடைகள் | -கட்டணம் வசூலிக்கும் உரிமை |

மேற்காணும் வரிசை எண் 1 முதல் 3 வரை உள்ள மாநகராட்சி கட்டண கழிப்பிடங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மட்டும் ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் வகையில் பொது ஏலம் நடத்தவும், வரிசை எண் 4 முதல் 7 முடிய காணும் இனங்களுக்கு அனைத்து ஏலதாரர்களும் கலந்து கொள்ளும் வகையில் ஏலம் கோரவும் அதற்கான ஏல விளம்பர அறிவிப்புகளை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினங்களை மன்றம் ஏற்று கொள்ளவும், மேலும் பொது ஏல சிறப்பு நிபந்தனைகளை அங்கீகரிக்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தற்சமயம் கூடாததால் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன் ஒப்புதல் பெறப்பட்டது. இது சம்பந்தமாக மாமன்றத்தின் பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:15359/06/அ2(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண். 243 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 35

கோவை மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 7 சிங்காநல்லூர் பகுதி கடைவீதி தெருவில் சுகாதார பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் சி. மற்றும் டி. கட்ட ரூ.1,00,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டு மாநகராட்சியின் கொள்கை விளக்கத்தில் மாநகராட்சியின் சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தருவதென குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, அப்பகுதியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த குடியிருப்புகளுக்கு பதிலாக அதே இடத்தில் தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய இரண்டு பிளாக்குகள் கொண்ட 16 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/- க்கு மாமன்றத்தின் ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை, அவர்களின் நிர்வாக அனுமதி பெற, பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.597/08/எம்.டி.2

### மாநகர மன்ற தீர்மானம் எண். 244 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 36

கோவை மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 7, சிங்காநல்லூர் பகுதி கடைவீதி தெருவில் சுகாதார பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் ஏ. மற்றும் பி. கட்ட ரூ.1,00,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டு மாநகராட்சியின் கொள்கை விளக்கத்தில் மாநகராட்சியின் சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தருவதென குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, அப்பகுதியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த குடியிருப்புகளுக்கு பதிலாக அதே இடத்தில் தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய இரண்டு பிளாக்குகள் கொண்ட 16 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/- க்கு மாமன்றத்தின் ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை, அவர்களின் நிர்வாக அனுமதி பெற, பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.598/08/எம்.டி.2

### மாநகர மன்ற தீர்மானம் எண். 245 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 37

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பிரிவு எண் 1 வார்டு எண் 2 ல் உள்ள துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு பிளாக் ஏ மற்றும் பி – யில் ஒரு பிளாக்கில் 8 குடியிருப்புகள் வீதம் இரண்டு பிளாக் ஏ மற்றும் பி ல் 16 குடியிருப்புகள் கட்டுவதற்கு பயனீர் மில் சாலையில் உள்ள துப்புரவு தொழிலாளர் குடியிருப்பில் ரூ.1,00,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி எதிர்நோக்கி இப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் பரிந்துரைக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.16056/08/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 246 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 38**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பிரிவு எண் 1 வார்டு எண் 2 ல் உள்ள துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு பிளாக் E மற்றும் F – ல் ஒரு பிளாக்கில் 8 குடியிருப்புகள் வீதம் இரண்டு பிளாக் E மற்றும் F ல் 16 குடியிருப்புகள் கட்டுவதற்கு பயனீர் மில் சாலையில் ரூ.1,00,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி எதிர்நோக்கி இப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் பரிந்துரைக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.16159/08/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 247 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 39**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பிரிவு எண் 1 வார்டு எண் 2 ல் உள்ள துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு பிளாக் சி மற்றும் டி – யில் ஒரு பிளாக்கிற்கு 8 குடியிருப்புகள் வீதம் இரண்டு பிளாக் சி மற்றும் டி ல் 16 குடியிருப்புகள் கட்டுவதற்கு பயனீர் மில் சாலையில் ரூ.1,00,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி எதிர்நோக்கி இப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் பரிந்துரைக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.16055/08/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 248 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 40**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் பிரிவு எண் 2 வார்டு எண் 7க்குட்பட்ட சிங்காநல்லூர் பகுதியில் நவீன ஆடு அறுவை மனை கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரைப்படி தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதியை நிர்வாகப்பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்து பணிக்கான மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கான மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.131/08/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 249 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் : 41**

பொருள் : கோவை மாநகராட்சி - மேற்கு மண்டலம் - சாஸ்திரி மைதானத்தில் மின் ஒளி கிரிக்கெட் போட்டி நடத்த 8-12-2007 முதல் 15-12-2007 வரை அனுமதியளிக்கப்பட்டது – மாமன்ற ஒப்புதல் பெறுதல் தொடர்பாக.

----

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம் சாஸ்திரி மைதானத்தில் 8.12.2007 முதல் 15.12.2007 வரை மின் ஒளி கிரிக்கெட் போட்டி நடத்த தினசரி வாடகை ரூ.1000/-மற்றும் வைப்புத் தொகை ரூ.10,000/-ம் பெற்று அவசர அவசியத்தைக் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் சாய்பாபா காலனி கிரிக்கெட் அசோசியேஷனுக்கு அனுமதி அளிக்கப்பட்டதனை அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க. எண்.10825/07/D1(W)

**மாநகர மன்ற தீர்மானம் எண். 250 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் :42**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – கணினி பிரிவு - கணினி விபர பதிவாளர்கள், சூப்பர் வைசர் மற்றும் நெட் ஒர்க் என்ஜினியர், உதவி நெட் ஒர்க் என்ஜினியர் - பணியிடங்களை புதியதாக ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணியில் அமர்த்துவது தொடர்பாக.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும் சேவை மையங்களில் சொத்துவரி குடிநீர் விநியோகம் மற்றும் இதர விபரங்களை கணினி பொறியில் பதிவு செய்ய 37 எண்ணிக்கை விபரப் பதிவு செய்பவர்கள் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் நெட்ஒர்க் என்ஜினியர், ஒரு உதவி நெட் ஒர்க் என்ஜினியர் ஆகியோரை பணிக்கு அமர்த்த தகுதியான நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறைகளில், தகுதிக்கான உறை மற்றும் விலைப்புள்ளி விபரங்களுடன் 16.11.2007 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டன. அவற்றில் ஒரு நிறுவனம் மட்டுமே தொழில்நுட்ப தகுதி பெற்றதாக இருந்தபடியால் மறு ஒப்பந்தப்புள்ளி 28-12-2007ல் கோரப்பட்டதில் தி/ள் கே.ஜி.ஐ.எஸ்.எல். மற்றும் தி/ள் கே.ஜி.பைனான்சியல் சாப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் ஆகிய இரு நிறுவனங்கள் கலந்து கொண்டன. அந்த இரண்டுமே தொழில்நுட்ப தகுதி பெற்றவையாக இருந்தபடியால் அவற்றின் விலைப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டன.

அதில் தி/ள். கே.ஜி.ஐ.எஸ்.எல். நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளியாக ஒரு வருடத்திற்கு 37 விபரப் பதிவாளர்களுக்கு ரூ.15,54,000/- (ரூ.3500 x 37 x 12 மாதங்கள்) ஒரு கண்காணிப்பாளர் மற்றும் நெட்ஒர்க் என்ஜினியர் ஒன்று ரூ.1,08,000/- (ரூ.9000 x 1 x 12 மாதங்கள்) மற்றும் ஒரு உதவி நெட்ஒர்க் என்ஜினியர் ரூ.98,000/- (ரூ.8200 x 1 x 12 மாதங்கள்) ஆக ஒரு ஆண்டுக்கு மொத்தம் ரூ.17,60,400/- (ரூ.15,54,000 + ரூ.1,08,000 + ரூ.98,400) செலவினமாகும் எனத் தெரிவித்துள்ளனர்.

எனவே மேற்படி நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொண்டு அதற்காகும் ஒரு வருடத்திற்கான செலவுத் தொகை ரூ.17,60,400/-ஐ அங்கீகரிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம். (எண். 14040/2007/கு.வி.6)

**மாநகர மன்ற தீர்மானம் எண். 251 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் :43**

பொருள் : கோவை மாநகராட்சி - மாமன்ற உறுப்பினர்கள் - பிற உள்ளாட்சி அமைப்புகளின் திட்டங்களை நேரில் கண்டறிதல் - நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டது – மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

----

கோவை மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் பிற உள்ளாட்சி அமைப்புகளின் திட்டங்களை நேரில் கண்டறிந்துவர ந.க.எண்.65937/07/மா.ந அ4 நாள் 14.12.2007ம் தேதியிட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.65937/07/மா.ந அ4 நாள் 14.12.2007 மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: பதிவு செய்யலாம். (ந.க.எண்.10801/07/எம்.சி8)

**மாநகர மன்ற தீர்மானம் எண். 252 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் பயணங்களுக்கு உண்டாகும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து செலவிடவும், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் III-ன் நிதி அல்லது ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத்திட்ட நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையரைக் கோரலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் :44**

கோயம்புத்தூர் மாநகராட்சி, சிங்காநல்லூர் கிராமம் , ஒண்டிபுதூர் பகுதியில் க.ச. எண். 762/3ஏ, 761/1,2ஏ,2பி,3ஏ,3பி,3சி மற்றும் 3டி-ல் உள்ள 12.48 ஏக்கர் நிலத்தினை மாநகராட்சி கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் அமைப்பதற்காக நில ஆர்ஜித சட்டம் 1894 பிரிவு 17ல் உள்ள அவசர பிரிவின் கீழ் கட்டாய நில ஆர்ஜிதம் செய்ய (urgency clause) மாநகர மன்ற தீர்மானம் எண் 78 நாள் 23.7.2007ல் ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றியதன் பேரில், மேற்படி நிலங்களை ஆர்ஜிதம் செய்து வழங்கக்கோரி உரிய உத்தேசங்கள் மாவட்ட ஆட்சியர் கோவை அவர்களுக்கு 9.8.2007ம் தேதிய கடிதத்தில் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் இருந்தது.

இந்நிலையில் மாவட்ட ஆட்சியர் கோவை அவர்களின் கடித எண் ந.க.40375/2007/ ஊ2 நாள் 4.1.2008-ல் மேற்படி சிங்காநல்லூர் கிராமம் க.ச. 761/1, காலையில் 3.06 ஏக்கர் க.ச. 761/2ஏ காலையில் 0.34 ஏக்கர் மற்றும் க.ச. 761/2பி காலையில் 2.52 ஏக்கர் ஆக மொத்தம் 5.92 ஏக்கர் இருபோக நன்செய் நிலங்களாக இருப்பதால், அவற்றை தவிர்த்து அருகாமையில் உள்ள புஞ்சை நிலங்களை தேர்வு செய்யுமாறு தெரிவித்து திருப்பி அனுப்பப்பட்டது.

மேற்படி கடிதத்தில் மாவட்ட ஆட்சியர் கோவை அவர்கள் தெரிவித்ததின் பேரில் மாநகராட்சி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இப்புலங்களுக்கு அருகாமையில் உள்ள நிலங்களை ஆய்வு செய்யப்பட்டது.

மேற்படி மாநகராட்சி கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் அமைக்க ஏற்கனவே நில ஆர்ஜிதம் செய்து வழங்கக் கோரிய காலைகளுக்கு அருகாமையில் உள்ள சிங்காநல்லூர் கிராமம் க.ச. எண் 758/1 பாகம், 2 பாகம், 761/3 ஏ, 3பி, 3சி, 3டி, 762/2, 3ஏ,3பி,3சி,4,5 காலைகளில் உள்ள 14.40 ஏக்கர் புஞ்சை நிலத்தினை தேர்வு செய்து நகரளவையர் (கிழக்கு) அவர்கள் வரைபடம் சமர்ப்பித்துள்ளார்.

எனவே, மாநகராட்சி கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் அமைக்க சிங்காநல்லூர் கிராமம் கீழ் காணும் புலங்களில் உள்ள

| புல எண் | விஸ்தீரணம் ஏ.செ. |
|---|---|
| க.ச. எண். 758/1 பாகம் | 0.23 |
| க.ச. எண். 758/2 பாகம் | 0.14 |
| க.ச. எண். 761/3ஏ | 0.20 |
| க.ச. எண். 761/3பி | 1.35 |
| க.ச. எண். 761/3சி | 1.44 |
| க.ச. எண். 761/3டி | 1.33 |
| க.ச. எண். 762/2 | 3.71 |
| க.ச. எண். 762/3ஏ | 4.46 |
| க.ச. எண். 762/3பி | 0.79 |
| க.ச. எண். 762/3சி | 0.65 |
| க.ச. எண். 762/4 | 0.05(புற) |
| க.ச. எண். 762/5 | 0.05 |
| மொத்தம் | 14.40 ஏக்கர் |

நிலங்களை நில ஆர்ஜித சட்டம் 1894 பிரிவு 17ல் உள்ள அவசர பிரிவின் கீழ் கட்டாய நில ஆர்ஜிதம் (urgency clause) செய்ய மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கலாம். ந.க. எண். 12069/2007/எச்1 கிழக்கு

**மாநகர மன்ற தீர்மானம் எண். 253 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. நில உரிமையாளர்கள் விரும்பினால் தனியார் பேச்சு வார்த்தை மூலம் நில ஆர்ஜிதம் செய்து கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் :45**

பொருள் : வணிக வளாக கடைகள் - கோயமுத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் - 20'x10' அளவுள்ள கடை எண். 1 மற்றும் 2- பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோரப்பட்டது - உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு ஒப்படை செய்தல்-தொடர்பாக.

---------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.24 பகுதியில் அமைந்துள்ள நஞ்சுண்டாபுரம் ரோட்டில் அமைந்துள்ள 20'x10' அளவுள்ள இரண்டு மாநகராட்சி வணிக வளாக கடைகள் மாமன்ற தீர்மான எண். 112 நாள் 24.09.2007-ன்படி, பொது ஏலம் ,ஒப்பந்தப்புள்ளி அறிக்கை 15.11.2007 மற்றும் 7.12.2007ம் தேதிகளில் கோரப்பட்டது இதில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு அதிகபட்சமாக ஏலம் கோரப்பட்டுள்ளது.

| வ. எண். | இனம் | அதிகபட்ச கேள்விதாரர் | சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டால் பெறப்படும் மாதாந்திர உரிமக்கட்டணம் ரூ. | ஏலம் மூலம் கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.1 | திரு. கே. ஹரி | 3,000/- | 4,200/- |
| 2. | நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.2 | திரு. கே. ஹரி | 3,000/- | 4,200/- |

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4)துறை அரசாணை (நிலை) எண்.92 நாள் 3.7.2007-ல், 4 (i ) ன்படி முதல் தடவையாக குத்தகைக்கு விடப்படும்போது நகராட்சியின் அசையா சொத்துக்கள் அனைத்தும் பொது ஏலத்தின் மூலமாக குத்தகைக்கு விடப்பட வேண்டும் என உள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள தனியார் கடைகளுக்கு அதிகபட்சமாக சதுரடி ஒன்றிற்கு ரூ.15/- வீதம் வசூல் செய்யப்படுவதாக வெளியிடப்பணியாளர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதன்படி தலா 200 சதுரடி கொண்ட நஞ்சுண்டாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் இரண்டு கடைகளுக்கு நிர்ணயம் செய்யப்படும்பொழுது மாதாந்திர உரிமக் கட்டணத் தொகை ரூ.3,000/- என வருகிறது.

எனவே தற்போது திரு. கே. ஹரி என்பவரால் பொது ஏலம் மூலம் கடை எண்.1 மற்றும் 2-க்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச மாதாந்திர உரிமக் கட்டண கேள்வித் தொகை தலா ரூ.4,200/- என்பது சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும் வாடகையைவிட அதிகமாக கோரப்பட்டுள்ளதனால் மேற்படி உயர்ந்தபட்ச கேள்வித் தொகையினை ஏற்று ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. (அவசர அவசியத்தைக் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.)

அலுவலகக்குறிப்பு -அனுமதிக்கலாம். ந.க.எண். 16649/ 2006/ கிஅ.7

**மாநகர மன்ற தீர்மானம் எண். 254 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு நிராகரிக்கவும் மறுஏலம் கொண்டு வரவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :46

பொருள் - உரிம இனங்கள்-கோவை மாநகராட்சி-கிழக்கு மண்டலம்-
2008-2009- ம் ஆண்டிற்கான உரிம இனங்கள் - பொது ஏலம் ,
ஒப்பந்தப்புள்ளி கோருல் -தொடர்பாக.

---------

கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 2008-2009ம் ஆண்டிற்கான கீழ்க்குறிப்பிட்டுள்ள வருடாந்திர உரிம இனங்களின் வாயிலாக 1.4.2008 முதல் 31.03.2009 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பெறப்படும் பலன்களை அனுபவித்துக் கொள்ளும் உரிமம் வழங்க பொது ஏலம்/மறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டியுள்ளது.

<u>வருடாந்திர உரிம இனங்கள் (01.04.2008 முதல் 31.03.2009 வரை)</u>

1. சிங்காநல்லூர் தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
2. சிங்காநல்லூர் ஆடு அறுவைமனை (8 கடைகளுடன் கூடியது) கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
3. உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
4. சௌரிபாளையம் ஆடு அறுவைமனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்
5. சிங்காநல்லூர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
6. இராமநாதபுரம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்- கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
7. புலியகுளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்- கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
8. பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்-கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
9. ரேஸ்கோர்ஸ் ரோடு மாநகராட்சி கட்டண கழிப்பிடம்- கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
10. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
11. சிங்காநல்லூர் பேருந்து நிலைய- வாகன நிறுத்துமிடத்தில்-கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
12. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளும் உரிமம்.

மேற்காண் 1 முதல் 12 வரையிலான உரிம இனங்களை 2008-2009ம் ஆண்டிற்கு 01.04.2008 முதல் 31.03.2009 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பலன்களை அனுபவித்துக் கொள்ளும் உரிமம் வழங்க பொது ஏலம்/ மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் கோரவும், அதற்கான அறிவிப்புகளை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும், மேலும் 2008-2009ம் ஆண்டுக்கான பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. (அவசர அவசியத்தைக் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.)

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். **16426/ 2007 / கிஅ7**

### மாநகர மன்ற தீர்மானம் எண். 255 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :47

கணபதி கிராமம் க.ச.எண் : 393/1 பாகம் 393/2 பாகம், திரு.பி.சோமசுந்தரம் என்பவர் விரிவு அபிவிருத்தி திட்ட எண் 2 மாநகராட்சி வார்டு எண் 72-ல் உள்ள **60'0"** பி2-பி3 சாலையை 30 அடி சாலையாக மாற்றம் செய்யவும் அவ்வாறு மாற்றம் செய்யத் தேவையான ஏற்கனவே உள்ள **23'0"** உடன் **7'0"** இடம் வழங்குவதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

மேற்படி இடம் சர்வே எண் 393/1 பகுதி மற்றும் 2 பகுதியில் கணபதி கிராமத்தில் சி .எம்.எஸ் பள்ளியின் பின்புறமுள்ள பகுதியில் கணபதி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 2-இல் உத்தேச 60 அடி அகல பி2-பி3 சாலையாக உள்ளது. மனுதாரரின் இடத்தை ஒட்டினாற்போல் உத்தேச 60’ அகல சாலைக்குரிய நிலப்பகுதி போக 23’ அகலத்தில் அனுமதியற்ற மனைப்பிரிவு சாலை உள்ளது . இச்சாலையை 30’ அகல சாலையாக மாற்ற தமது இடத்திலிருந்து 7 அடி அகல பரப்பினை தானமாக தருவதாகவும் 60 அடி அகல திட்டச்சாலையின் மீதமுள்ள சாலைப்பகுதியினை நீக்கம் செய்யவும் மனுதாரர் அனுமதி கோரியுள்ளார். கீழ் மேலான 60’ அகலத்தில் உள்ள இச்சாலையின் மேற்கில் 80’ அகல தென்வடல் புழக்க சாலையும் கிழக்கில் 50’ அகல தென்வடல் திட்ட சாலையும் உள்ளன. தற்சமயம் இச்சாலையமைக்க உத்தேசித்துள்ள நிலங்கள் அனைத்தும் காலியாக உள்ளதால் இச்சாலைகளை இணைக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளது. கிழக்கு கடைசியில் உள்ள அத்திப்பாளையம் பிரிவு சாலை இணையும் பகுதியில் மட்டும் கருப்பராயன் கோயில் மற்றும் தொழிற்கூடங்கள் உள்ளதால் , இந்த 60’ அகல சாலையை அத்திப்பாளையம் பிரிவு சாலை வரை நீட்டிக்க இயலாது.

மனுதாரரின் கோரிக்கைப்படி சாலையை நீக்கம் செய்யாமல் அதன் அகலத்தை 60’ அகலத்திலிருந்து 40’ அகலமாக (23’ அகல அனுமதியற்ற மனைப்பிரிவு சாலையினையும் சேர்த்து) குறைத்து இச்சாலையை அபிவிருத்தி செய்யலாம் என்று நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி குழு தனது தீர்மான எண் 34 நாள் : 05.09.2007-ல் மனுதாரரின் இடத்திலிருந்து 10 அடி அகல பரப்பினை மட்டும் தானமாக பெற்று சாலை அபிவிருத்தி செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

குறைந்தது 40 அடி அகல இணைப்பு சாலையாக இருந்தால் பொது மக்கள் அதிக பயன்பெற இயலும். எனவே 40 அடி சாலையாக அபிவிருத்தி செய்ய மன்றம் முடிவு செய்யலாம். மாமன்ற முடிவிற்கு மீள சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்: 5858/2007/H2/(n)

## மாநகர மன்ற தீர்மானம் எண். 256 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பினை ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பி2-பி3 சாலையை 40 அடி சாலையாக மாற்றம் செய்து அபிவிருத்தி செய்ய நிலையில் உள்ள 23 அடி சாலையுடன் சேர்த்து 40 அடி சாலையாக அமைக்கப்பட வேண்டிய சாலையினை விண்ணப்பதாரரால் தார்சாலையாக அமைத்து, மழைநீர் வடிகால், மற்றும் தெரு விளக்கு வசதிகள் ஏற்படுத்தி மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :48

பொருள்- பணியமைப்பு-கோவை மாநகராட்சி-உதவி பொறியாளர்-
பணியிடங்கள்- நிரப்புதல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக.

இம்மாநகராட்சியில் காலியாக உள்ள 9(ஒன்பது) உதவி பொறியாளர் பணியிடங்களுக்கு நேரிடை நியமனம் செய்ய உதவி இயக்குநர், தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை அவர்களிடமிருந்து தனது கடிதம் எண். எக்ஸ்.2 /ஜி /1818/ 07 நாள் 25.11.2007-ல் தகுதியான நபர்களின் பெயர்ப்பட்டியல் பெறப்பட்டது.

இவர்களை 08.01.2008 அன்று மாலை 3.00 மணியளவில் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நியமனக்குழு முன்னிலையில் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் ஆஜராக கோரியதன் பேரில், கீழ்க்கண்ட பட்டியலில் கண்ட 4 தகுதியான நபர்களை நியமனக்குழு தனது தீர்மான எண். 48, நாள் 08.01.2008-ல் தேர்வு செய்துள்ளது.

கோவை மாநகராட்சி சட்டம் பிரிவு 106 (2) (b) ன்படி வகுப்பு II -ன் கீழ் வரும் பதவிகளை அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மாமன்றம் நிரப்பலாம் என்பதால் மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு உதவி பொறியாளா் பணியிடத்தில் 6500-200-11100 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயா் விலாசம் | இனவாரி சுழற்சி | பிறந்த தேதி | வயது | கல்வி தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1) | ஜி. யோகசித்ரா,<br>எண்.12, ஈ.வி.ஆா். பெரியாா் நகா்,<br>அண்ணா நகா்,<br>பீளமேடு,<br>கோயம்புத்துாா்-641 004 | R.No. 6<br>S.C<br>Priority<br>(Women) | 19.12.1971 | 36 | P.G. Engineering (Civil Engineering) | |
| 2) | எஸ். சிவராஜ்,<br>எண். 52, 4-வது தெரு,<br>திருநீலகண்டபுரம்,<br>திருப்பூா்-641 607 | R.No.13<br>MBC &<br>DNT<br>Communities<br>Non<br>Priority<br>(General) | 20.05.1975 | 32 | P.G. Engineering (Civil Engineering) | |
| 3) | எஸ். ஆா். சவிதா,<br>சிக்கராயபுரம்,<br>தீனம்பாளையம்,<br>கோயம்புத்துாா்-641 109 | R.No.15<br>General<br>Turn<br>Non<br>Priority<br>(Women) | 15.06.1975 | 32 | P.G. Engineering Civil Engineering) | |
| 4) | எஸ்.பி.ரவிக்கண்ணன்,<br>எண்.28, மகாலஷ்மி நகா்,<br>மசக்காளிபாளையம்,<br>வரதராசபுரம் போஸ்ட்,<br>கோயம்புத்துாா்-641 005 | R.No.16<br>S.C.<br>Priority<br>(General) | 29.08.1968 | 39 | P.G. Engineering (Civil Engineering) | |

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 2375/2007/ எம்.சி. 1

**மாநகர மன்ற தீா்மானம் எண். 257 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்துாா் மாநகராட்சி

---

**பொருள் எண் : 49**

பொருள் - கோயம்புத்துாா் மாநகராட்சி – பொது சுகாதாரம் - நான்கு மண்டலங்களில் உள்ள நகா்நல மையங்களை மேம்படுத்தப்பட்ட நகா்நல மையங்களாக தரம் உயா்த்தி நவீனமயமாக்குதல் - தெற்கு மற்றும் மேற்கு மண்டலங்களுக்குட்பட்ட இரண்டு நகா்நல மையங்களுக்குத் தேவையான கலா் டாப்ளா் ஸ்கேன் கருவிகள் வாங்குவதற்கு அனுமதி கோருவது – தொடா்பாக.

பாா்வை – 1. கோயம்புத்துாா் மாநகராட்சியின் 2007 – 2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை.
2. சுகாதாரக்குழு தீா்மான எண் 19 நாள் 09.01.2008.
3. கோப்பு எண் ந.க.எண் 7200/2007/எம்.இ7

-----

பாா்வை 1ல் கண்ட கோயம்புத்துாா் மாநகராட்சியின் 2007-2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையில் இம்மாநகராட்சியின் நான்கு மண்டலங்களிலுள்ள 4 நகா்நல மையங்களை மேம்படுத்தப்பட்ட நகா்நல மையங்களாக தரம் உயா்த்தி நவீனமயமாக்குதல் பணிகளுக்கென ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடா்ந்து கீழ்கண்ட நான்கு நகா்நல மையங்களில் கலா் டாப்ளா் ( **Colour Doppler Scan Machine** ) ஸ்கேன் கருவிகள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. சிங்காநல்லூர் நகர்நல மையம் (கிழக்கு மண்டலம்)
2. ஆர்.கே.பாய் நகர்நல மையம் (மேற்கு மண்டலம்)
3. சி.டி.எம். நகர்நல மையம் (வடக்கு மண்டலம்)
4. வி.வி.எம் நகர்நல மையம் (தெற்கு மண்டலம்)

பார்வை 2ல் கண்ட சுகாதாரக்குழு தனது தீர்மான எண் 19 நாள் 09.01.2008 –ல் மேற்படி நகர்நல மையங்களுக்கு தேவையான கலர் டாப்ளர் ( Colour Doppler Scan Machine ) ஸ்கேன் கருவிகளை நடைமுறை விதிகளின்படி வழக்கமான ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வாங்கி பொருத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. மேற்கூறிய கலர் டாப்ளர் ஸ்கேன் கருவி ஒன்றின் உத்தேச விலை ரூ.11.00 இலட்சம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வி.வி.எம் நகர்நல மையம் மற்றும் மேற்கு மண்டலத்திற்குட்ப்பட்ட ஆர்.கே.பாய் நகர்நல மையம் ஆகிய இரண்டு நகர்நல மையங்களுக்குத் தேவையான கலர் டாப்ளர் ( Colour Doppler Scan Machine) ஸ்கேன் கருவிகளை வாங்கி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.22.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - வணக்கத்திற்குரிய மேயர் அனுமதி பெற்று
ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை அனுமதிக்கலாம்.

ந.க.எண் 599/2008/எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண். 258 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :50

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - நான்கு மண்டலங்களில் உள்ள நகர்நல மையங்களை மேம்படுத்தப்பட்ட நகர்நல மையங்களாக தரம் உயர்த்தி நவீனமயமாக்குதல் - வடக்கு மற்றும் கிழக்கு மண்டலங்களுக்குட்பட்ட இரண்டு நகர்நல மையங்களுக்குத் தேவையான கலர் டாப்ளர் ஸ்கேன் கருவிகள் வாங்குவதற்கு அனுமதி கோருவது – தொடர்பாக.

பார்வை – 1. கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2007 – 2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை.
2. சுகாதாரக்குழு தீர்மான எண் 19 நாள் 09.01.2008.
3. கோப்பு எண் ந.க.எண் 7200/2007/எம்.இ7

-----

பார்வை 1ல் கண்ட கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2007-2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையில் இம்மாநகராட்சியின் நான்கு மண்டலங்களிலுள்ள 4 நகர்நல மையங்களை மேம்படுத்தப்பட்ட நகர்நல மையங்களாக தரம் உயர்த்தி நவீனமயமாக்குதல் பணிகளுக்கென ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கீழ்கண்ட நான்கு நகர்நல மையங்களில் கலர் டாப்ளர் ( Colour Doppler Scan Machine ) ஸ்கேன் கருவிகள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. சிங்காநல்லூர் நகர்நல மையம் (கிழக்கு மண்டலம்)
2. ஆர்.கே.பாய் நகர்நல மையம் (மேற்கு மண்டலம்)
3. சி.டி.எம். நகர்நல மையம் (வடக்கு மண்டலம்)
4. வி.வி.எம் நகர்நல மையம் (தெற்கு மண்டலம்)

பார்வை 2ல் கண்ட சுகாதாரக்குழு தனது தீர்மான எண் 19 நாள் 09.01.2008 –ல் மேற்படி நகர்நல மையங்களுக்கு தேவையான கலர் டாப்ளர் ( **Colour Doppler Scan Machine** ) ஸ்கேன் கருவிகளை நடைமுறை விதிகளின்படி வழக்கமான ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வாங்கி பொருத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. மேற்கூறிய கலர் டாப்ளர் ஸ்கேன் கருவி ஒன்றின் உத்தேச விலை ரூ.11.00 இலட்சம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட சி.டி..எம் நகர்நல மையம் மற்றும் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சிங்காநல்லூர் நகர்நல மையம் ஆகிய இரண்டு நகர்நல மையங்களுக்குத் தேவையான கலர் டாப்ளர் ( **Colour Doppler Scan Machine**) ஸ்கேன் கருவிகளை வாங்கி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.22.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - வணக்கத்திற்குரிய மேயர் அனுமதி பெற்று
ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை அனுமதிக்கலாம்.

ந.க.எண் **600/2008/**எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண். 259 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் :51**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மலேரியா கொசு ஒழிப்புத் திட்டம் - தெற்கு மற்றும் மேற்கு மண்டலங்களுக்குத் தேவையான வாகனங்களில் பொருத்தப்பட்ட இரண்டு கொசு மருந்து புகை அடிக்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கு அனுமதி கோருவது – தொடர்பாக.

பார்வை – 1. கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2007 – 2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை.
2. சுகாதாரக்குழு தீர்மான எண் 20 நாள் 09.01.2008.
3. கோப்பு எண் **4357/2007/**எம்.இ7.

-----

பார்வை 1ல் கண்ட கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2007-2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையில் மலேரியா கொசு ஒழிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு எண்ணிக்கை வீதம் வாகனங்களில் பொருத்தப்பட்ட நான்கு கொசுமருந்து புகை அடிக்கும் இயந்திரங்களை ( **Vehicle mounted fogging machine** ) ரூ.50.00 இலட்சத்தில் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பொதுசுகாதாரத்தை கருத்தில் கொண்டு மிகவும் அவசியமாகவும், அவசரமாகவும் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது.

மேற்கூறிய வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசுமருந்து புகை அடிக்கும் இயந்திரம் ஒன்றின் உத்தேச விலை ரூ.12.50 இலட்சம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. பார்வை 2ல் கண்ட சுகாதாரக்குழு தனது தீர்மான எண் 20 நாள் 09.01.2008-ல் மேற்படி நான்கு மண்டலங்களுக்குத் தேவையான வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசுமருந்து புகை அடிக்கும் இயந்திரங்களை ( **Vehicle mounted fogging machine** ) நடைமுறை விதிகளின்படி வழக்கமான ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வாங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, தெற்கு மற்றும் மேற்கு மண்டலங்களுக்குத் தேவையான இரண்டு வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசுமருந்து புகை அடிக்கும் இயந்திரங்களை ( **Vehicle mounted fogging machine** ) ரூ.25.00 லட்சம் உத்தேச மதிப்பீட்டில் வாங்குவதற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - வணக்கத்திற்குரிய மேயர் அனுமதி பெற்று
ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை அனுமதிக்கலாம்.

ந.க.எண் **601/2008/**எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண். 260 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :52

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மலேரியா கொசு ஒழிப்புத் திட்டம் - வடக்கு மற்றும் கிழக்கு மண்டலங்களுக்குத் தேவையான வாகனங்களில் பொருத்தப்பட்ட இரண்டு கொசு மருந்து புகை அடிக்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கு அனுமதி கோருவது – தொடர்பாக.

பார்வை – 1. கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2007 – 2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை.
2. சுகாதாரக்குழு தீர்மான எண் 20 நாள் 09.01.2008.
3. கோப்பு எண் 4357/2007/எம்.இ7.

-----

பார்வை 1ல் கண்ட கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2007-2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையில் மலேரியா கொசு ஒழிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு எண்ணிக்கை வீதம் வாகனங்களில் பொருத்தப்பட்ட நான்கு கொசுமருந்து புகை அடிக்கும் இயந்திரங்களை ( Vehicle mounted fogging machine ) ரூ.50.00 இலட்சத்தில் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பொதுசுகாதாரத்தை கருத்தில் கொண்டு மிகவும் அவசியமாகவும், அவசரமாகவும் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது.

மேற்கூறிய வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசுமருந்து புகை அடிக்கும் இயந்திரம் ஒன்றின் உத்தேச விலை ரூ.12.50 இலட்சம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. பார்வை 2ல் கண்ட சுகாதாரக்குழு தனது தீர்மான எண் 20 நாள் 09.01.2008-ல் மேற்படி நான்கு மண்டலங்களுக்குத் தேவையான வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசுமருந்து புகை அடிக்கும் இயந்திரங்களை ( Vehicle mounted fogging machine ) நடைமுறை விதிகளின்படி வழக்கமான ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வாங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, வடக்கு மற்றும் கிழக்கு மண்டலங்களுக்குத் தேவையான இரண்டு வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசுமருந்து புகை அடிக்கும் இயந்திரங்களை ( Vehicle mounted fogging machine ) ரூ.25.00 லட்சம் உத்தேச மதிப்பீட்டில் வாங்குவதற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - வணக்கத்திற்குரிய மேயர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை அனுமதிக்கலாம்.

ந.க.எண் 602/2008/எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண். 261 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :53

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி - ஒருமுறையே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளை கோயம்புத்தூர் மாநகராட்சியில் தடை செய்யக் கோருதல் - தொடர்பாக.

------------------

பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அவற்றால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களான, பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கேரிபேக், பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுகள், பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் மேசை விரிப்புகள், உணவகங்களில் பயன்படுத்தப்படும் உணவுத்தட்டுகளில் ஒருமுறையே உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் சீட்கள் மற்றும் ஏனைய பிளாஸ்டிக் பொருட்கள் மக்களால் முறையின்றி கண்ட இடங்களில் எறியப்பட்டு வதாலும் அவை மக்கும் தன்மை இல்லாததாலும் அவற்றால் சுற்றுப்புற சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு ஒருமுறையே பயன்படுத்தி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மறு சுழற்சி செய்வது கடினமான செயலாக இருப்பதால் இவ்வகைப்பொருட்கள் எறியப்படுவதால் அனேக பிரச்சனைகள் உண்டாகின்றன. கழிவு பிளாஸ்டிக் பொருட்கள் நிலத்தில் தங்குவதால் மழை நீரினை நிலத்திற்குள் செல்லவிடாமல், நிலத்தடி நீரினைப் பெருக விடாமலும், நிலத்தில் உள்ள கழிவு பிளாஸ்டிக் பைகள் விலங்குகளால் உண்ணப்பட்டு விலங்குகளின் உயிருக்கு ஆபத்தினையும் விளைவிக்கின்றது. அவை பாதாள சாக்கடையில் அடைப்பினையும் விளைவிக்கின்றன. இவற்றோடு அவை அந்த இடத்தின் அழகினையும் கெடுத்து சுகாதாரக்கேட்டினையும் விளைவிக்கின்றது.

எனவே, மாநகராட்சியின் சுற்றுப்புறச்சூழலைக் கருத்தில் கொண்டு, மாநகராட்சியின் அழகினைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் கீழ்க்கண்ட ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களான

1. ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கேரிபேக்
2. ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுகள்
3. ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கப்புகள்
4. ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் டம்ளர்கள்
5. ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மேசை விரிப்புகள்
6. உணவகங்களில் பயன்படுத்தப்படும் உணவு தட்டுக்களில் ஒருமுறையே உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் சீட்டுகள்

ஆகியவைகளை கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் உற்பத்தி செய்யவும், உபயோகிக்கவும், விற்பனை செய்யவும், கையிருப்புகள் வைத்திருக்கவும் தடை செய்யப்படுகின்றது. இத்தடை உத்தரவினை மீறி மாநகராட்சியின் எல்லைக்குள் ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுகள், ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் டம்ளர்கள், ஒருமுறையே பயன்படுத்தப்படும் மேசை விரிப்புகள், உணவகங்களில் பயன் படுத்தப்படும் உணவு தட்டுகளில் ஒருமுறையே உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் சீட்டுகள் முதலியவற்றை உற்பத்தி செய்பவர்களுக்கும் அவற்றை கையிருப்பு வைத்திருப்பவர்களுக்கும், உபயோகிப்பாளர்களுக்கும், விற்பனை செய்பவர்களுக்கும் கீழ்க்கண்ட அபராதம் விதிக்கலாம். மேலும், இவ்வகை பிளாஸ்டிக் பொருட்களை தயாரிப்பவர்களிடமிருந்தும் பயன்படுத்தப்படும் வியாபாரிகளிடமிருந்தும் விற்பனை செய்யும் விற்பனையாளர்களிடமிருந்தும் மேற்கூறிய அனைத்து பிளாஸ்டிக் பொருட்களும் பறிமுதல் செய்யப்படும்.

*<u>அபராதம்</u>*

| | |
|---|---|
| உற்பத்தியாளர்களுக்கு அபராதம் | - ரூ.5000/- |
| மொத்த விற்பனையாளர்களுக்கு அபராதம் | - ரூ.2500/- |
| சில்லரை விற்பனையாளர்களுக்கு அபராதம் | - ரூ. 750/- |
| உபயோகிப்பாளர்களுக்கு அபராதம் | - ரூ. 100/- |

தலைவர் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் சென்னை -32. அவர்களின் கடித எண்.எச். டபிள்யு.எம் பிளாஸ்டிக்/1110/99/ கெமிக்கல். நாள்.07.03.2001-ல் மேற்கண்ட தீர்மானத்தை கோயம்புத்தூர் மாநகராட்சியில் நிறைவேற்றிட கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றம் தனது தீர்மான எண்.68. நாள். 20.06.2000 மற்றும் மாமன்ற தீர்மான எண்.170. நாள்.11.06.2001 ஆகியவற்றில் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் 20 மைக்ரான் தடிமனுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் கேரிபேக், டம்ளர்கள் மற்றும் பிளாஸ்டிக் விரிப்புகள் தயார் செய்யவும் விற்பனை செய்யவும் பயன்படுத்தவும் தடை விதித்து அதை மீறுபவர்களுக்கு அபராதம் வசூலிக்கவும், தீர்மானித்துள்ளது. மேலும், பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தடை செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக கடந்த 07.03.2001 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தலைமையில் அனைத்து திருமண மண்டபங்கள், திரையரங்குகள் மற்றும் சமுதாயக் கூடங்களின் உரிமையாளர்களின் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டு மேற்படி உரிமையாளர்கள் அனைவரும் தங்களது கட்டிடங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை அனுமதிக்கமாட்டோம் என விழா நடத்துபவர்களிடம் ஒப்பந்தம் செய்யும் பொழுதே நிபந்தனை விதிக்க முடிவு செய்யப்பட்டது.

எனவே, தலைவர், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், சென்னை - 32. அவர்களின் கடிதத்தின்படி ஒருமுறையே பயன்படுத்தி (Disposable) வீசி எறியப்படும் பிளாஸ்டிக் கேரிபேக், பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுகள், பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் மேசைவிரிப்புகள் மற்றும் உணவு தட்டுகளில் பயன்படுத்தும் பிளாஸ்டிக் சீட்டுகள் ஆகியவைகளை தயாரிப்பது, விற்பது மற்றும் பயன்படுத்துவதை தடை செய்யலாம். இதனை மீறுபவர்களுக்கு மேற்கண்டவாறு அபராதம் விதிக்கலாம்.

சுகாதார நிலைக்குழு எண் 18, நாள் 09-01-2008-ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண்.13664/2000/எம்.இ.8

**மாநகர மன்ற தீர்மானம் எண். 262 நாள்: 21.1.08**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :54

மனுதாரர் திரு. திருமலைச்சாமி மற்றும் நான்கு நபர்கள், கதவு எண்-27, சர்சண்முகம் ரோடு, ஆர்.எஸ்,புரம், கோவை என்பவர் தனது மனுவில் கோவை கிருஷ்ணராயபுரம் கிராமம், நகரளவு எண்.169/3 'B' யில் 44 சென்ட் 309 சதுர அடி நிலம் தனக்கு பாத்தியப்பட்டது என்றும், இதில் 2400 ச.அடி நிலம் முக்கோண வடிவில் உள்ளதால், இந்த இடம் எந்த உபயோகத்திற்கும் ஏற்ற வகையில் இல்லை என்றும், இதன் அருகில் இருக்கும் மாநகராட்சிக்கு சொந்தமான நகரளவு எண்170/1 -இல் இருந்து 2400 ச.அடி நிலத்தினை பரிவர்த்தனை செய்தால், இரு நிலங்களும் ஒழுங்கான வடிவில் அமையும் என்றும், மேற்படி கோரிக்கையினை 30.03.2007-ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டது. பொருள் விவாதம் நடந்து 1200 ச.அடிகள் எங்களிடம் பெற்று நிலபரிவர்த்தனை செய்து கொள்ளலாம் என்று மன்றத்தில் முடிவெடுக்கப்பட்டது. மேற்கண்ட இடத்தை நில பரிவர்த்தனை செய்தால் மாநகராட்சிக்கு சொந்தமான இடமும், மனுதாரரின் இடமும், இரண்டு இடங்களுமே முக்கோண வடிவத்தில் உள்ள இரண்டு பேருடைய இடத்தை நேர் வடிவம் பெற்றுவிடும். இரண்டு இடங்களுடைய மார்க்கெட் மதிப்பும் ஒன்றுதான். இதில் மாநகராட்சியின் உரிய இடமும் பயன் அடையும். ஆகையால் இதை அருள்கூர்ந்து மீண்டும் பரிசீலித்து ஒப்புதல் அளித்து உதவுமாறு கேட்டுள்ளார்கள்.

மேற்படி நில பரிவர்த்தனை நேர் செய்து கொள்ள கிரையத்துக்கு தேவையான பத்திர செலவுகள் அனைத்தையும் நாங்களே ஏற்றுக் கொள்கிறோம் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

மா.ந.ம.தீ.எண். 322 நாள் 30.3.07-ன்படி பொருளில் குறிப்பிட்டுள்ள மாநகராட்சி நிலத்திலிருந்து 2400 சதுரடி நில பரிவர்த்தனை செய்வதற்கு மனுதாரர்கள் பொருளில் குறிப்பிட்டுள்ள தங்களது நிலத்திலிருந்து 3600 சதுரடி நிலத்தினை மாநகராட்சிக்கு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி இடத்தில் 2400 ச.அடிகள் பரிவர்த்தனை செய்து கொள்வது சம்பந்தமாக மீண்டும் பரிசீலிக்க மனுதாரர் கேட்டுள்ளதை மாநகர மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -மன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண் 00494/ 06/ எச் 2 (வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண். 263 நாள்: 21.1.08**

மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலபரிவர்த்தனை செய்து கொள்ள அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :55

பொருள்- கோவை மாநகராட்சி - குடிநீர் கட்டணம் - திருத்தி அமைத்தல் -குடிநீர் விநியோக விதிகள் திருத்தம் செய்தல் - பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை மற்றும் ஆலோசனை பெறப்பட்டது – மன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் சம்பந்தமாக.

கோவை மாநகராட்சியில் குடிநீர் கட்டணம் கடந்த 1-04-2003 ல் நிர்ணயிக்கப்பட்டு பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வந்த குடிநீர் கட்டணங்கள் தற்போது செயல்படுத்தப்படவுள்ள குடிநீர் திட்டங்களுக்கும் குடிநீர் பராமரிப்பு மற்றும் செலவினங்கள் தற்போதுள்ள குடிநீர் திட்டங்களில் கூடுதலாக செலவழிக்கப்படுவதால் குடிநீர் கட்டணத்தினை உயர்த்தவும் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தி அமைக்கவும் மாமன்றம் தனது தீர்மான எண் 79 நாள் 23-07-2007 ல் கீழ்குறிப்பிட்டுள்ளபடி திருத்தி அமைக்கப்படவுள்ள குடிநீர் கட்டணத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட கட்டண விகிதங்கள் மற்றும் திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் உபவிதிகள் குறித்து பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதேனும் இருப்பின் கடந்த 28-11-2007 ம் அன்று தினசரி நாளிதழ் மற்றும் பொது இடங்களில் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது.

<u>தற்போது திருத்தி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டண விகிதம்.</u>

| வரிசை எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக கழாய் இணைப்பிற்கு | | பொது நிறுவனங்கள் முதலியவற்றுக்கு மொத்த விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு | |
|---|---|---|---|---|---|
| அ | வீட்டு உபயோகம் | அ. இலவச விநியோகம் நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் | | அ. இலவச விநியோகம் இல்லை | |
| | இருமாத உபயோக அளவு | ஆ. இலவச சலுகை நீங்கலாக அதிகப்படி விநியோகம் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கு | | ஆ. ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | |
| | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| 1. | 50000 லிட்டர் வரை | ரூ. 3.50 | ரூ. 4.50 | ரூ. 3.50 | ரூ. 5.25 |
| 2. | 50001 – 100000 லிட்டர் வரை | ரூ. 4.00 | ரூ. 6.00 | ரூ. 4.00 | ரூ. 6.00 |
| 3. | 100001 – 150000 லிட்டர் வரை | ரூ. 5.00 | ரூ. 8.00 | ரூ. 5.00 | ரூ. 8.00 |
| 4. | 150001 லிட்டருக்கு மேல் | ரூ. 6.50 | ரூ. 11.00 | ரூ. 6.50 | ரூ. 10.00 |
| | | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் | | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் | |
| | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| | | ரூ. 80.00 | ரூ. 120.00 | ரூ.600.00 | ரூ. 900.00 |

<u>வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு வழங்கப்படும் குடிநீர் கட்டண விபரம்</u>

| வரிசை எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக கழாய் இணைப்பிற்கு | | பொது நிறுவனங்கள் முதலியவற்றுக்கு மொத்த விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு | |
|---|---|---|---|---|---|
| ஆ | வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு | அ. இலவச விநியோகம் இல்லை | | அ. இலவச விநியோகம் இல்லை | |
| | இருமாத உபயோக அளவு | ஆ. ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | | ஆ. ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | |
| | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| 1. | 50000 லிட்டர் வரை | ரூ. 7.00 | ரூ. 10.50 | ரூ. 7.00 | ரூ. 10.50 |
| 2. | 50001 – 100000 லிட்டர் வரை | ரூ. 9.00 | ரூ. 13.50 | ரூ.9.00 | ரூ. 13.50 |
| 3. | 100001 – 150000 லிட்டர் வரை | ரூ.12.00 | ரூ. 18.00 | ரூ.12.00 | ரூ. 18.00 |
| 4. | 150001 லிட்டருக்கு மேல் | ரூ.15.00 | ரூ. 22.50 | ரூ.15.00 | ரூ. 22.50 |
| | | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் | | இ. இருமாத குறைந்தபட்ச கட்டணம் | |
| | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| | | ரூ. 350.00 | ரூ.525.00 | ரூ. 900.00 | ரூ.1350.00 |
| | | | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| | குழாய் முறையில் குடிநீர் வீட்டு உபயோகத்திற்கு | ஒவ்வொரு குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ. 50.00 | ரூ. 50.00 |
| | குழாய் முறையில் கிணற்று நீர் வீட்டு உபயோகத்திற்கு | 1. குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ.50.00 | ரூ. 50.00 |
| | | 2. கூடுதல் குழாய் இணைப்பு ஒவ்வொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ.60.00 | ரூ. 60.00 |

மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குடிநீர் கட்டணத்தில் 10% உயர்த்தி வசூலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

குடிநீர் கட்டணம் திருத்தி அமைப்பது மற்றும் குடிநீர் விநியோக விதிகள் திருத்தம் செய்தல் தொடர்பாக தொண்டாமுத்தூர் சட்டமன்ற உறுப்பினர், மாமன்ற உறுப்பினர், குடியிருப்போர் நல சங்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | விண்ணப்பதாரா் பெயா் மற்றும் முகவரி | ஆட்சேபணை மற்றும் ஆலோசணைகள் |
|---|---|---|
| 1 | திரு.மு.கண்ணப்பன்,<br>சட்டமன்ற உறுப்பினா்,<br>தொண்டாமுத்துா் தொகுதி | குடிநீா் கட்டணத்தினை கூடுதலாக உயா்த்தப்படும் நடவடிக்கையினால் ஏழை எளிய மற்றும் நடுத்தரமக்களை பாதிக்கும் பொருளாதார சுமையாக உள்ளது. எனவே அமுல்படுத்தப்படவுள்ள குடிநீா் கட்டண உயா்வை ரத்து செய்ய வேண்டுமாறு கேட்டுள்ளாா். |
| 2 | திரு. வெ.கி.இராஜேந்திரன்,<br>47வது வட்ட மாமன்ற உறுப்பினா்,<br>கோவை மாநகராட்சி | எக்காரணத்தை கொண்டும் தண்ணீா் கட்டணத்தை உயா்த்தக் கூடாது. |
| 3. | திருமதி.லட்சுமி ,<br>14 / 1 , பொன்னல்லி கோனாா் வீதி கோவில்மேடு | குடிநீா் கட்டணம் ஏற்கனவே அதிகமாக உள்ளது. எனவே குடிநீா் கட்டணத்தை உயா்த்தக் கூடாது. |
| 4. | திரு. சிவராமன் மற்றும் மற்றவா்கள்<br>1 / 4 , பொன்னல்லி கோனாா் வீதி கோவில்மேடு | |
| 5 | திரு. பாலசுப்பரமணியம்<br>23 / D , பொன்னல்லி கோனாா் வீதி கோவில்மேடு | |
| 6 | திருமதி. என். கமலம்<br>23 / D , பொன்னல்லி கோனாா் வீதி கோவில்மேடு | |
| 7 | திரு. வி.பி. ராமசாமி<br>13, A , கே.கே.புதுாா் ரோடு,<br>வேலாண்டிபாளையம் | |
| 8 | திரு. வி.பி.ஆறுமுகம்<br>11, A , பொன்னல்லி கோனாா் வீதி கோவில்மேடு | |
| 9 | திருமதி. சகுந்தலா,<br>74, சின்னன்ன செட்டி வீதி,<br>வேலாண்டிபாளையம் | |
| 10 | திருமதி.வி.ஆா.ரம்யா<br>12A , பொன்னல்லி கோனாா் வீதி கோவில்மேடு | |
| 11 | திரு. வி.கே. சின்னசாமி<br>10, கே.கே.புதுாா் ரோடு -2<br>வேலாண்டிபாளையம் | |
| 12 | நஞ்சப்பா நகா் பொதுமக்கள் ,<br>வாா்டு எண் -7 படகு இல்லம் அருகில்,<br>திருச்சி சாலை, சிங்காநல்லுாா் | குடிநீா் கட்டண உயா்வுக்கு ஆட்சேபணை தெரிவித்துள்ளனா். |
| 13 | கோவை மாவட்ட நுகா்வோா் உரிமை குழுக்களின் கூட்டமைப்பு<br>175, எஸ்.சி.காம்பளக்ஸ்,<br>அண்ணாஜி ராவ் வீதி,<br>மேட்டுப்பாளையம் | 03-12-2007 ம் தேதிய தினகரன் பத்திரிக்கையில் 03-01-2007 க்குள் ஆட்சேபணைகள் இருந்தால் தெரிவிக்கலாம் என கூறிவிட்டு 10-12-07 முதல் கட்டண உயா்வு என தெரிவித்திருப்பதை ஆட்சேபித்தல் மற்றும் குடிநீா் கட்டண உயா்வினை மறு பரிசீலனை செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| 14 | திரு.ஆர்.ஜீவானந்தம், அட்வகேட்.<br>79, டி.பி சாலை ஆர்.எஸ்.புரம் | திருமண மண்டபங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு மட்டும் 1000 லிட்டருக்கு ரூ. 125 முதல் 150 வரை நிர்ணயம் செய்யக் கோருதல். |
| 15 | திரு.ஆர்.வெங்கட்ராமன்,<br>55, இ.பி.காலனி | குடிநீர் கட்டணம் ஏற்கனவே அதிகமாக உள்ளது எனவே குடிநீர் கட்டணத்தை உயர்த்தக் கூடாது. |
| 16 | திரு.ஜி.நவனீதகிருஷ்ணன்,<br>16/ 2, கிருஷ்ணா காலனி,<br>பீளமேடு | இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை குடிநீர் கணக்கெடுப்பு செய்தாலே குடிநீர் கட்டணம் கூடுதலாக கிடைக்கும் என தெரிவித்துள்ளார். |
| 17 | திரு. வி.தாமோதர்,<br>3.ஏ பவானி வீதி, காவேரி நகர்,<br>கோயம்புத்தூர் | குடிநீர் விநியோகத்தை சீராக விநியோகம் செய்து கசிவுகளை நிறுத்தி சரியாக பராமரித்தாலே கூடுதல் வருவாய் கிடைக்கும். எனவே குடிநீர்கட்டணத்தை உயர்த்த வேண்டியது அவசியமில்லை. |
| 18 | திரு. டி.ஏ. பாலசுப்பரமணியன்,<br>89 கிழக்கு லோகமானிய சாலை,<br>ஆர்.எஸ்.புரம் | தற்போது குடிநீர் கட்டணத்தினை 10 சதவீதம் உயர்த்தினால் போதுமானது. |
| 19 | கே.ஆர்.ஜி நகர் பொதுநல சங்கம்,<br>கே.ஆர்.ஜி நகர், கணபதி , கோவை | குடிநீர் கட்டண உயர்வு பொதுமக்களை பெரிதும் பாதிக்கக் கூடிய அளவு உயர்த்தி இருப்பதால் குடிநீர் கட்டண உயர்வை நடைமுறை படுத்துவதை ரத்து செய்யுமாறு கேட்டுள்ளார். |
| 20 | கெம்பட்டிகாலனி குடியிருப்போர் சங்கம்,<br>கெம்பட்டிகாலனி, கோயம்புத்தூர் | ஏற்கனவே வசூலிக்கப்படும் குடிநீர் கட்டணம் அதிகமாக உள்ளதால் குடிநீர் கட்டணத்தை உயர்த்தக் கூடாது. |
| 21 | திரு.கே.எம். முகமது உசேன்,<br>65, பள்ளிவாசல் வீதி,<br>கரும்புகடை, கோயம்புத்தூர்-8 | அத்தியாவசிய தேவைகள் எல்லோருக்கும் சமமாக நிறைவேற்றி கொடுத்த பின்பு குடிநீர்கட்டணத்தினை உயர்த்தலாம். |
| 22 | திரு.ஏ.பி.கணேசன்,<br>19, சந்திரசேகர புரம்,<br>செல்வபுரம்,<br>கோயம்புத்தூர் | குடிநீர்கட்டணத்தினை உயர்த்த ஆட்சேபனை தெரிவிக்க வில்லை. குடிநீர் விநியோகத்தை சீர்படுத்தவும் இரு மாதங்களுக்கு ஒரு முறை கணக்கிட்டு வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ள ஆலோசனை வழங்கியுள்ளார். |

மேற்கண்ட சட்டமன்ற உறுப்பினர், மாமன்ற உறுப்பினர், குடியிருப்பு நல சங்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலித்து மாமன்றம் குடிநீர் கட்டண உயர்வினை அமுல்படுத்துவது குறித்தும் குடிநீர் விநியோக விதிகளில் திருத்தம் மேற்கொள்ளவும் மாமன்றம் முடிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

(அ) வரிசை எண் 3 முதல் 11 வரையிலான பொதுமக்களின் ஆட்சேபனை மனுக்கள் ஒரே மாதிரியான அச்சடிக்கப்பட்ட ஆட்சேபனை மனுக்களாக கையொப்பமிட்டு பெறப்பட்டுள்ளது.

(ஆ) மாநகராட்சியில் குடிநீர் கட்டண வீதங்கள் மாமன்ற தீர்மான எண் 341 நாள் 31-01-2003 ன் படி திருத்தி அமைக்கப்பட்டு கடந்த 1-04-2003 முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது.

(இ) சிறுவாணி மற்றும் பில்லூர் குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்படும் குடிநீருக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணமாக 31-12-2007 வரை நிலுவையில் உள்ள தொகை ரூ. 114.30 கோடி மாநகராட்சியின் மூலம் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது.

கோவை மாநகராட்சியிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு குடிநீர் விநியோகத்திற்கென பயன்படுத்தும் மின்சாரத்திற்கான கட்டண தொகை ரூ. 1.51 கோடி 31-12-2007 வரையில் நிலுவையில் உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து மாநகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீர் ஆயிரம் லிட்டருக்கு ரூ. 4.50 என்ற விகிதத்தில் பெற்று பொதுமக்களுக்கு ஆயிரம் லிட்டருக்கு ரூ. 3.50 என்ற பழைய குடிநீர் கட்டண விகிதத்தில் வழங்கப்பட்டு குடிநீர்கட்டணம் வசூலிக்கப்படுவதால் மாநகராட்சிக்கு ஆண்டுதோறும் கீழ்குறிப்பிட்டுள்ளபடி வருவாய் இழப்பு ஏற்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் குடிநீர் விநியோகம் தலைப்பின் கீழ் பெறப்படும் வரவு மற்றும் செலவினம் கீழ்வருமாறு

| வருடம் | வரவு (ரூ. கோடியில்) | செலவினம் (ரூ.கோடியில்) | பற்றாக்குறை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| **2004-2005** | **19.43** | **20.54** | **1.11** |
| **2005-2006** | **20.40** | **24.05** | **3.65** |
| **2006-2007** | **23.32** | **27.17** | **3.85** |

தற்போது ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்கென பில்லூர் தனி குடிநீர் திட்டம் II ரூ.113.74 கோடியில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டில் மாநகராட்சியின் 30 சதவீத பங்குத் தொகையான 34.12 கோடி மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் ரூ. 22.75 கோடி நிதியினை வட்டி இல்லாமல் திரும்ப செலுத்தவும் மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து, பெறப்படும் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் ஜவஹர்லால் நேரு நகர புனரமைப்புத்திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து மான்யமாக பெறும் திட்டங்களுக்கு குடிநீர் கட்டண விகிதங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்கு தேவையான அளவு உயர்த்தி நிர்ணயம் செய்து சீர்திருத்தங்கள் செய்ய உறுதியளித்து மத்திய அரசு மாநில அரசு மற்றும் மாநகராட்சிக்கிடையே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் குடிநீர் திட்டத்தில் ஏற்கனவே ஏற்பட்ட நிகர பற்றாக்குறை ரூ. 8.61 கோடி மற்றும் அரசுக்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகைக்கு குடிநீர் கட்டண உயர்வு தவிர்க்க இயலாது. எனவே பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகத்தை வழங்கவும் குடிநீர் பராமரிப்பினை நன்றாக மேற்கொள்ளுவதற்கும் ஏற்றவாறு குடிநீர் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அத்தியாவசியம் ஏற்படுகிறது, எனவே மேற்கண்ட அனைத்து ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளும் நியாயமாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லாததால் நிராகரித்து விடலாம், மேலும், மாமன்றம் தனது தீர்மானம் எண் 79 நாள் 23-07-2007 ல் ஒப்புதல் வழங்கி உள்ளபடி குடிநீர் கட்டண உயர்விற்கு மாமன்றம் உறுதியளிக்கவும் மற்றும் திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் திட்ட உபவிதிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அங்கீகாரம் பெற்று திருத்தி அமைக்கப்படும் கட்டண வீதத்தினை மாநகராட்சி சட்ட விதிகளின்படி 01-01-2008 க்கு பதிலாக 01-06-2008 முதல் செயல்படுத்த மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலகக் குறிப்பு -அனுமதிக்கலாம் ந.க.எண். **4848/2003/**கு.வி2

**மாநகர மன்ற தீர்மானம் எண். 264 நாள்: 21.1.08**

பொருளில் வீட்டு உபயோக குடிநீர் உபயோகமுறை இருமாத உபயோக அளவு 1,50,001 லிட்டருக்கு மேல் ரூ.10.00 எனவும், பொது நிறுவனங்கள் முதலியவற்றுக்கு மொத்த விநியோகம் 20.எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு ரூ.11.00 எனவும் திருத்திய கட்டண விகிதம் நிர்ணயம் செய்யவும், அலுவலகக் குறிப்பு அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :56

கோவை மாநகராட்சி சாலைகள்-இரயில்வே மேம்பாலம் /அடிமட்ட பாலம் அமைத்தல்-மாநகராட்சி கொள்கை ஒப்புதல் வேண்டி-நெடுஞ்சாலை அரசு செயலர் கடிதம் 11.1.2008 நாளிட்ட குறிப்பு.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இரயில்வே லெவல் கிராசிங்கில் உயர் மட்ட /அடிமட்ட பாலம் அமைக்க இரயில்வே அமைச்சகம் முன் வந்ததாகவும், மேற்படி பாலங்களை நிதி பங்கீடு மூலம் 50 விழுக்காடு நிதி இரயில்வே அமைச்சகமும், 50 விழுக்காடு நிதி மாநில அரசு சாலைகளுக்கு மாநில அரசு அல்லது உள்ளாட்சி சாலைகளுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமும் பெற்று பணி முடிக்க உத்தேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் உயர் மட்ட /அடிமட்ட பாலம் அமைக்க இரயில்வே அமைச்சகம் மூன்று இடங்களை தேர்வு செய்துள்ளது. அவை

1) சிங்காநல்லூர் எஸ்.ஐ.எச்.எஸ். காலனி சாலை (எல்.சி.நெ.4)

2) ஒண்டிப்புதூர்-இருகூர் சாலை (எல்.சி.நெ.2)

3) விளாங்குறிச்சி சாலை-யார்டு சாலை (எல்.சி.நெ. 7)

ஆகிய மூன்று இடங்களில் உயர் மட்ட/ அடிமட்ட பாலம் அமைக்க தேவைப்படும் நிதியில் 50 விழுக்காடு நிதி அளிக்க மாமன்றத்தின் கொள்கை ஒப்புதல் கோரியுள்ளதால் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 131 /2008 /எம்.டி 2

### மாநகர மன்ற தீர்மானம் எண். 265 நாள்: 21.1.08

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஓம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி